# அருள் ஒளி



05 NOV 2012

## தீபாவளிச் சிறப்பு மலர்

வெளியீடு

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை

2012



யோகர் சுவாமிகளின் அற்புதமான
தோற்றப்படம், அன்பர் ஒருவர் வழங்கினார்.

உ

# அருள் ஒளி



(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்

நந்தன வருட தீபாவளி சிறப்பு மலர்

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. : QD / 74 / NEWS / 2006Y


## பாரம்பரிய சைவ பண்பாட்டுப் பிரதேசங்களைப் பாதுகாத்தல்

எம்மண்ணில் போரின் அனர்த்தங்களால் ஏற்பட்ட பாதிப்புக்கு எல்லையில்லை. தமிழ் மக்களின் உயிரிழப்பு உடைமை அழிவுக்கு அப்பால் பாரம்பரிய சமயமாகிய சைவ சமயத்துக்கு ஏற்பட்ட பாதிப்பு என்பது வர்ணிக்க முடியாதது. பல புதிய மதக் கொள்கைகள் மக்களிடையே பரப்பப்பட்டு வறுமையைச் சாதகமாக்கி மதம் மாற்றுபவர்கள் தம் காரியத்தை இலகுவாக நிறைவேற்றி வருகிறார்கள். அமைதி வழியில் சைவமக்கள் சகித்துக் கொண்டிருப்பது உண்மை. இச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கும் முயற்சி என்பது வேதனை தருகிறது. பலர் வெளிநாடுகளில் இருந்து ஊர்ப்பற்றுடன் தம் குலதெய்வங்களின் திருப்பணிக்கும் தாம் கற்ற பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், உறவினர் வாழ்வுக்கும் உதவி வருவது மறக்கமுடியாது. சிலர் தம் மூதாதையர் கட்டிக்காத்த வீடுகளை அவசரம் அவசரமாக உச்சவிலை கோருபவர்களுக்கு விற்றுத் தம் ஊர் உறவைத் தொடர்பை வேர் அறுத்துக்கொண்டிருப்பது வேதனை தருகிறது. பல லட்சம் கொடுத்து வாங்கிய சில வீடுகளில் பிற சமய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு மதமாற்றச் செயற்பாட்டுக்கு வீடுகள்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பயன்படுத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில் சைவப் பாரம்பரியம் பேணும் குப்பிளான் கிராமத்தில் பிறமதத் தேவாலயம் திடீரென எழுந்தது தொடர்பாக அவ்வூர் மக்கள் தம் அதிர்ச்சியை வெளிப்படுத்தினர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் ஆண்கள் பெண்கள் இப்பிரச்சினை தொடர்பாக எதிர்ப்பு ஊர்வலம் நடாத்தியமையை ஊடகங்கள் வெளிப்படுத்தின. வன்னிப் பெருநிலப் பரப்பில் அவசரம் அவசரமாக மக்கள் மதம் மாற்றப்பட்டுவருவதைக் கண்டு சைவ உலகம் மிகுந்த வேதனையடைகிறது. சைவமக்கள் எக்காலத்திலும் மத ரீதியான வீண் சச்சரவுகளை விரும்பியதில்லை. எனினும் சைவ சமயத்தைப் பழித்தல், சைவ வழிபாட்டுத் தலங்களை அவமதித்தலை ஒரு காலமும் ஏற்றுக்கொண்டதுமில்லை. நல்லை நகர் நாவலர் பெருமானின் சீரிய சிந்தனை மதமாற்ற வேகம் அன்று தடுக்கப்பட்டது. இன்றைய சூழல் மிகவும் வித்தியாசமானது. ஆரவாரமின்றி மதமாற்றம் நடைபெறுகிறது. அதற்கு உறுதுணை செய்பவர்களாக சைவமக்கள் இருந்துவிடக் கூடாது. ஒவ்வொரு ஊர்மக்களும் இவ்விடயத்தில் விழிப்பாக இருக்கவேண்டும்.

- ஆசிரியர்

உ
சிவமயம்

# தமிழ் மறவர் திருஞான சம்பந்தர்

**'அருந்தமிழ் கற்று முற்றுமாயினான்**
**தமிழ்க் கிளவி இன்னிசைசெய் ஞானசம்பந்தன்**
**சந்தமொடு செந்தமிழ் இசைத்த புகலி பந்தன்'**

'அருந்தமிழ் கற்று முற்றுமாயினான் தமிழ்க் கிளவி இன்னிசைசெய் ஞானசம்பந்தன் சந்தமொடு செந்தமிழ் இசைத்த புகலி பந்தன்'

எனத் தன்னைத் தமிழாகவே வடிவங் காட்டினார் உணர்த்தினார் – திருஞான சம்பந்தர்.

அவர் தமிழ் மறவர், சமயக் குரவர்

சங்க காலத்திற்குப் பின் களப்பிரர் ஆட்சி கண்டது தமிழகம். பாலியும் பிராகிருதமும் வடமொழியும், ஆட்சி புரிவோரால் அரியணையில் அமர்த்தப் பட்டன. அருந்தமிழை அழிக்கத் தடம் போட்டனர். அந்நாளில் தமிழ்வாழ களங்கண்டார்.

சைவநெறியும் தமிழும் தழைத்து இனிது ஓங்கப் போராடிய போராளியே நல்லவராய இன்தமிழ் ஞானசம்பந்தர்.

வேதங்களை முன்நிறுத்துவது வைதிகம். திருக்கோவில் வழிபாட்டை முன் நிறுத்துவது பக்தி இயக்கம்.

வேதவழக்கு யாகங்களால் செய்யப் படுவது! பத்தி இயக்கம் – திருக்கோவில் வழிபாடு, அபிடேக ஆராதனைகளைக் கொண்டது.

தமிழ் ஞானசம்பந்தர் அபிடேக, ஆராதனைகளையே ஏற்றார். அந்தியுள் மந்திரம் காயத்திரி இல்லை – வேதம் நான்கிலும் – மெய்ப்பொருள் ஆனது நமச்சிவாய மந்திரமே என்றார்.

'சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன்' என திருக்கடைக் காப்பில் தன்னை வெளிப்படுத்திக் காட்டினார்.

சந்தை சந்தசு – என்றால் வேதம் – திராவிட வேதம் என்பர். இறையறிவை வடமொழியில் மட்டுமே கொடுக்க இயலும் என்பார் கருத்தை – மாற்றினார் தமிழிலும் தரமுடியும் என்று நிலைநிறுத்திக் காட்டினார் – நற்றமிழ்க்கு இன்துணை ஞானசம்பந்தர் எனும் புகழ் கொண்டார்.

பக்தி இயக்கம் தென்னகத்தில் தமிழ் நாட்டில் வளர்ந்தது. வளர்த்தவர் ஞான சம்பந்தர். அரியதான பிறவி கிடைத்தது. அதை மதித்துப் போற்றுங்கள்.

'ஈதோர் பிறவி நந்தமக்கு, மதித்திடுமின்' என்ற அடிப்படையில் வளர்ந்தது பக்தி இயக்கம். ஊன் உடம்பு ஆலயம், உடம்பு இழுக்கன்று – உடம்புள்ளே உறுபொருள் கண்டேன். உடம்பார் அழியின் உயிரார் அழிவர். உடம்பைப் காதலிக்க வேண்டும், ஆணும், பெண்ணுமாக இணைந்து "மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டும்." – பெண் ணில் நல்லாள் இறைவியோடு பெருந்தகை இறைவன் இருப்பதுபோல் 'வாழ வேண்டும்.'



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பிறவி ஈனம் அல்ல. உடம்பு பாவச்சுமை என்பதெல்லாம் பொய். வாழ்க்கையை வெறுக்க வேண்டியதில்லை. வாழ்க்கை வாழ்வதற்கே!

'வினைகெட இறைத்தொண்டும் – மக்கள் தொண்டும் போதும்' எனப் புலப்படுத்தியவர் தமிழ் ஞானசம்பந்தர்.

பத்தி செய்வதற்கு ஆரவாரங்கள் தேவை இல்லை. சடங்கு சம்பிரதாயங்கள் அவசியமில்லை. இனம், மொழி, குலம், கோத்திரம் உயர்வு தேவை இல்லை. இறைவன் – உள்ளிருப்பவன்; காப்பவன். இதுதான் பக்தி இயக்கம் எனப் பரப்பினார்.

தமிழ் மொழியைப் பக்தி மொழியாக உயர்த்திய பெருமை தமிழாகரர் ஞான சம்பந்தரையே சாரும். ஞானமிக்க தமிழால் ஞானசம்பந்தன் சொன்ன கோல மிக்க மாலை என்று குறிப்பிடுவார்.

தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலைகள் – தமிழ்ச் சைவநெறிகள் கோயில் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றிற்குப் புத்துயிர் அளித்த புனிதர். ஓர் இயக்கத் தலைவருக்கு உடைய வீரம், தளரா தன்னம்பிக்கை – பொது மக்கள் உளங்கவரும் புதுக்கருத்து. ஆற்றல் மிகுந்த ஆளுமை – அரவணைத்துச் செல்லும் பாங்கு போகும் இடம் யாவும் புலனாகும்.

இயற்கை எழில் கொஞ்சும் அழகை எழிலுறப் பதிகம் ஆக்கிய பாட்டுத் திறன், புதிய புதிய யாப்பு வடிவங்களை உருவாக்கிய புலமை – இகழ்வாரை இகழ்தல், தன் நெறி தாங்கி நிற்பாரைப் புகழ்தல் இவை யாவும் ஞானசம்பந்தரிடம் கொட்டிக்கிடக்கும் – சிறப்புகள்.

சிவனைத் தன் சிந்தையில் அன்னை யாகவும் அத்தனாகவும் எண்ணி உருகி யுள்ளார். வெந்துயர் எனை வந்து சேரலாம், அச்சம் தரலாம் – ஆனாலும், "எந்தாய் நீயே! உன்னை அல்லாது வேறு ஒன்றைப் புகழ்ந்து பேசாது என் நா" என்பார்.

**"தாயும் நீயே – தந்தையும் நீயே! சங்கரனே அடியேன்**
**ஆயு நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது உள்ளம்"**

என்று உருகுவார். இறைவனும் இறைவியும் உறவுக்குரியவர்கள். அவர்கள் அம்மை அப்பர் – அவர்கள் நம் உரிமைச் சுற்றம் – அவர்களிடம் உறவாடி – நாம் வேண்டியதைப் பெறலாம். இதுவே பக்தி இயக்கமாகத் திகழ வழிகாட்டியவர் நற்றமிழ் ஞானசம்பந்தர்.

வானம் பொய்த்துவிட்டது. மழை இல்லை; விளைச்சல் இல்லை; மண் பொய்த்து வளங்குன்றியது. ஆனாலும், சண்பை நகர் வாழும் அடியார்கள் கொடுப்பதில் குறைவுடையவர் அல்லராம்; தாம் மட்டும் ஒழித்து; ஊரோடு உண்பராம். உண்பகரவார் என்று உயிர்த் தமிழில் உரைப்பார்.

**"விண் பொய் அதனால் மழை விழாது ஒழியினும்**
**விளைவு தான் மிக உடை**
**மண் பொய் அதனால் வளம் இலாது ஒழியினும்**
**தமது வண்மை வழுவார் உண்ப கரவார்'**

என்று பாடுகின்றார்.

ஆக்கூர் ஈசனிடம் அன்புள்ளம் கொண்டவர்கள்

**"இன்மையாற் சென்று இரந்தார்க்கு**
**இல்லை எனாது ஈத்துவக்கும் தன்மையர்**
**ஆக்கூரில் தான்தோன்றி மாடமே**
**என்பது ஞானசம்பந்தரின் நற்றமிழ்".**

"உலகில் பசி எனில் எம்தாய் எனதுள்ளம் நடுங்குவயது இயல்பே",

என்பது வள்ளல் பெருமானின் பாடல் வரி. தமிழ்ஞான சம்பந்தரைத் தம் குருவாக ஏற்றவர் அல்லவா அவர். பசி எனும் தீ ஏழை அடியவர் நெஞ்சில் பற்றி எரியலாமா? ஏற்குமா சம்பந்தர் உள்ளம்?

இங்கே திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இணைந்து ஆற்றிய தொண்டு நினைவுக்கு வருகின்றது. "பஞ்சம் வந்து பசி பற்றியபோது நடந்த வரலாறு இது. பொன்னி நதி பாயும் புனல் சூழ்ந்த ஊர் திருவீழிமிழலை – ஊர் எங்கும் பொழில்கள். வளம் நிறைந்த வயல்கள். மழை பொய்த்துவிட்டது. மண்வளங் குன்றியது. ஊரெங்கும் வற்கடம் – பஞ்சம் வாட்டியது.

சமயக்குரவர் இருவரும் திருவீழிமிழலை வருகின்றனர். செந்நெல் வயல்கள் செத்துக் கிடப்பதைக் கண்டனர். மக்கள் வறுமையால் வாட்டமுற்று – துன்புறுவது கண்டனர். இறைவனை வேண்டினர்.

"இறைவன் கனவில் வந்தார், பஞ்சத்தினால் இடர்ப்படுவார் துயர் அறிந்தோம். அயவர்கள் துயர் அழிக்கப் பஞ்சப் படியாகப் பொற் காசுகள் தருவோம். திருக்கோவில் கிழக்கு வாயில் பலிபீடத்திலும் – மேற்கு வாயில் பலிபீடத்திலும் தினமும் ஒரு பொற்காசு வைப்போம்."

"அவற்றால் ஏழையர் பசி துடைப்பீர். பஞ்சம் நீங்கும் காலம் வரை பொற்காசு நல்குவோம்" என்று இறைவன் கூறினான்.

திருநாவுக்கரசர் மேற்கு வாயில் பலி பீடத்தில் ஒரு பொற்காசு கண்டார் – திருஞானசம்பந்தர் கிழக்கு வாயில் பலிபீடத்தில் ஒரு பொற்காசு பெற்றார்.

ஈசன் ஆணைப்படி பொற்காசுகளுக்குப் பொருள் பெற்றனர். அடியார் ஏழையர் பசி ஆற்றினர். சமுதாய நல்வாழ்விற்காப் பதிகம் பாடி படிக்காசு பெற்று பசித்தார் வறுமையை ஒழித்தார்கள்.

மக்கள் துயர் தீர்ப்பதே இறைப்பணி என்று தொண்டு புரிந்தவர்கள் ஞான சம்பந்தரும் நாவுக்கரசரும். சம்பந்தர் சமுதாயத் தொண்டாக காதல் மணத்தை முடித்து வைத்தார்.

திருமருகல் போனார், இறைவனுக்குத் தமிழ் மாலை சூட்டினார்; தங்கி இருந்தார்; கோவில் அருகில் ஒரு மடம். அங்கு வாலிப வணிகன் ஒருவனும் வனப்புடை கன்னி ஒருத்தியும் தங்கியிருந்தனர். இருவரும் மணவணி காண இருந்தனர். இரவு துயின்று கொண்டிருந்தபோது அரவு ஒன்று வணிகனைத் தீண்டியது. உயிர் பிரிந்தது. கன்னி கலங்கித் துடித்தாள். இரவு முழுதும் அழுது அரற்றினாள் – பொழுது புலர்ந்தது. கன்னி கோவிலுக்குச் சென்று இறைவனைக் கும்பிட்டாள். வணிகரின் உயிரை மீட்டுத்தர வேண்டினாள். இவளின் அழுகுரலை இறைவனை வழிபட வந்த ஞானசம்பந்தர் கேட்டார்.

கன்னியிடம் "பயப்படேல்! நீ பருவரலும் நும் பரிசும் பகர்வாய்" என வினவினார். சம்பந்தரிடம் தம் வரலாற்றைக் கூறினார்.

"வைப்பூரின் ஊர்த் தலைவர் என் தந்தை. அவரின் மருகரே இம் மனிதன். எம் தந்தைக்கு ஏழு பெண்கள். முதல் மகளை மணம் முடிப்பேன் என்று சொல்லி இவரிடமிருந்து நிறையப் பணம் பெற்றுக் கொண்டார். இவருக்கு மணம் செய்து தரவில்லை. மற்ற ஐவரையும் அவ்வாறே

பிறருக்கு மணம் முடித்தார். மனம் வருந்தும் இவர் மீது உளக் காதல் கொண்டேன். ஊர் விட்டு இவ்வூர் அடைந்து மணம் முடிக்க விரும்பினோம். இவரை அரவம் தீண்டியது. எங்கள் வாழ்க்கையில் அவலம் சூழ்ந்து விட்டது. அவரைத் தொட்டு அழும் உரிமை யும் இல்லாது கொடியவளானேன்" என்றாள். துடியிடையாளின் துயர் உரை கேட்ட திரு ஞானசம்பந்தர் இறந்தவனை உயிர்ப்பித்துத் தர இறைவனை இறைஞ்சிப் பாடினார்.

"உடையானே! தகுமோ இந்த ஒள்ளிழை யாள் உளமெலிவு" என்று பாட – நஞ்சு நீங்கி – நலிவு நீங்கி எழுந்தான் வணிகன். காதலர் – திருஞானசம்பந்தரை வணங்கி வாழ்த்துப் பெற்றனர். காதல் கடிமணத்தை முடித்து வைத்தார் – ஒளிர்ப்பூந்தமிழால் ஈசனைப் பாடிய திருஞானசம்பந்தர்.

தமிழ்மீது அவர் கொண்ட காதலை அளவிட முடியாது. ஊர்தோறும் போய் சைவ சமயத்தையும் – செப்பரிய தமிழ்ப் பதிகத்தையும் பாடித் தமிழ் பரப்பினார்.

இந்த இடத்தைவிட்டு ஈசன் நீங்கு வாரா? ஒருநாளும் நீங்கார் – விரும்பிக் கேட்டு மகிழ்வார் என்கிறார் ஞானசம்பந்தர்.

இதோ அந்தப் பாடல் வரிகள்

**"தமிழின் நீர்மை பேசி**
**தாளம் வீணை பண்ணி நல்ல**
**முழவம் மொந்தை மல்கு பாடல்**
**செய்கைஇடம் ஓவார்"**

பதிகப் பாடல் ஒன்றில் தவமல்கு தமிழ் ஆனவன் இறைவன் ஈசன். தமிழாகவே காட்சி தருகிறார் எனக் கூறுவார்.

திருவீழிமிழலை வருகின்றார் – நம்பி யாரூரர். இறைவன் கோவில் போனார் – வேண்டுகின்றார். நாவுக்கரசரும் – ஞான சம்பந்தரும் பாடும் இன்னிசைத் தமிழ்ப் பாடல்களை நீ கேட்க விரும்பினாய் – இறைவா – நீர் இருந்த இடத்தினின்று அதைக் கேட்க வேண்டும். எனவே பஞ்சம் நீக்கிப் படிக்காசு நல்கினீர் – என்று பாடிவிட்டு எனக்கும் அருள்புரிய வேண்டும் என்கிறார்.

இதோ அப்பாடல்....

**"பரந்த பாரிடம் ஊரிடைப்பலி பற்றி, பார்த்து சுற்றமாயினீர்**
**தெரிந்த நான் மறையோர்க்கு இடமாகிய திருமிழலை**
**இருந்துநீர் தமிழோடு இசைகேட்கும் இச்சையாற்**
**காசுநீத்தல் நல்கினீர்**
**அருந்தண் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே!"**

தமிழுக்கு அவர் தந்த அடைமொழிகள் பொருளுடையது – ஆழமானது – சிலவற்றை யேனும் எடுத்துக் காட்டினால் இன்பம் மல்கும், தமிழ்நம் இதயத்தை ஈரமாக்கும்!

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள தமிழ் அல்லாத பிறமொழிகள் பலவற்றிற்கும் நான்கு 'க', 'ச', 'த', 'ப' – ஆனால் ஒரே – க, ச, த, பவில் நான்கு ஒலிகளும் ஒலிக்கும் திறன் உண்டு தமிழுக்கு. எனவே, இதனைக் கூற திருஞானசம்பந்தர் துளங்கில் தமிழ் என்றார். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஞானத்தின் திருவுருவாய் – நான் நான் மறையின் தனித்துணையாய் வானத்தினின்று மண்ணில் வந்து உலவிய வளர்மதிக் கொழுந்தாய், தமிழுக்கும் சைவநெறிக்கும் தொண்டு செய்தவர் திருஞானசம்பந்தர்.

# தமிழர் திருமணத்தில் தாலி

**கவிஞர் கு.ம. கிருஷ்ணன் அவர்கள்**

திருமணத்தின் போது, மணமகள் கழுத்தில் மணமகன் தாலி அணிவிக்கும் வழக்கம், தமிழகத்தில் பண்டு தொண்டே தோன்றி, இன்று வரை தொடர்ந்து வருவதைக் காண்கிறோம்.

பருவமடைந்த ஒரு பெண், திருமணம் ஆனவளா? ஆகாதவளா? என்பதை அறிந்து கொள்வதற்கு அவள் கழுத்திலுள்ள தாலிதான் அடையாளச் சின்னமாகவும், அவள் கற்புக்கு வேலியாகவும் விளங்கு கிறது. அதனால்தான், தன் கழுத்திலுள்ள தாலியை மிகவும் புனிதமான சின்னமாகக் கருதும் வழக்கம் தமிழ்ப் பெண்களிடையே இன்றும் இருந்து வருகிறது.

இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதி காரத்தில், தமிழர் திருமணத்தில் தாலி அணிவிக்கும் வழக்கம் இருந்தது என்பதை உறுதியாக நம்புவதற்கான சான்றுகள் கிடைக்கின்றன.

'சிலப்பதிகாரம் இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கிறார்கள். அதில், கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடைபெற்ற போது, மணமகள் கழுத்தில் மணமகன் மங்கல நாண் அணிவித்ததாக அறி கிறோம். அத்துடன், சங்க காலத்திலேயே தாலி அணிவிக்கும் சடங்கு, தமிழர் திருமணங்களில் நிகழ்ந்ததாக இலக்கிய நூல்களால் அறிகிறோம். தமிழில் ஆழ்ந்த புலமையுடைய சான்றோர் பலரும் இதனைச் சொல்கிறார்கள். ஆனாலும் ஒரு சிலர் இந்த விஷயத்தில் ஐயப்பாடான ஒரு வினாவை எழுப்புகிறார்கள். அதாவது, கண்ணகி கோவலன் திருமணத்தைப் பற்றிக் கூறுகின்ற இளங்கோவடிகள்,

**'நீலவிதானத்து நித்திலப்பூம் பந்தற்கீழ்**
**வானூர் மதியும், சகடணைய வானத்துச்**
**சாலியொருமீன் தகையாளைக் கோவலன்**
**மாமுது பார்ப்பான் மறைவழிக் காட்டிடத்**
**தீவலம் செய்வது காண்போர்கண்**
**நோன்பென்னோ!'**

என்று தீவலம் செய்வதைத் தான் குறிப்பிட்டுள்ளார். கண்ணகிக்குக் கோவலன் தாலி கட்டிய விவரத்தை இளங்கோவடிகள் கூறவில்லை. அதற்கு என்ன காரணம் என்று வினா எழுப்புகிறார்கள். அதற்குரிய கார ணம் சிலப்பதி காரத்திலேயே இருக்கிறது.

**தாலி ஊர்வலம்**

கண்ணகி கோவலன் திருமணத்தில் முதல் நிகழ்ச்சியே மங்கலமான தாலி ஊர்வலம் தான். நன்கு அலங்கரித்துக் கொண்ட இரு பெண்கள் யானை மீதமர்ந்து நகர் முழுவதும் பவனி வந்து, மக்கள் அனைவருக்கும் திருமணச் செய்தியை அறிவிக்கின்றனர். கண்ணகி யின் தந்தை மாநாய்க்கனும், கோவலனின் தந்தை மாசாத்துவானும், சோழ மன்ன னுக்கு அடுத்த நிலையில் வைக்கத்தக்கப் பெருஞ் செல்வமும் செல்வாக்கும் உடையவர்கள். ஆகையால் உறவினர் மட்டுமன்றி, ஊரார் அனைவருக்குமே தம் மக்கள் திருமணச் செய்தியை அறிவித்தனர் போலும். இதனை :

"யானே யெருத்தத்து அணியிழை
யார் மேலிரீஇ
மாநகர்க்கு ஈந்தார் மணம்"

என்னும் வரிகளால் இளங்கோ அறிவிக்கிறார். இதை அடுத்து, புகார்நகர வீதிகளில் ஒரு ஊர்வலக் காட்சியை அவர் காட்டுகிறார்.

"முரசியம்பின முருடதிர்ந்தன முறையெ
முந்தன பணிலம் வெண்குடை
அரசெழுந்ததொர் படிஎழுந்தன அகலுண்
மங்கல அணியெழுந்தது"

என்று ஊர்வலக் காட்சியை வர்ணிக் கிறார் இளங்கோ! இந்த இரண்டு வரிகளுக்கும் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கீழ்க்கண்டவாறு பொருள் கூறியுள்ளார். அதாவது,

"கண்ணகி கோவலன் திருமணத்திற்கு முன்பே; புகார் நகர வீதிகளிலே நாம் காணும் ஊர்வலத்தில் முரசு முதலியன இயம்பின. மத்தளம் முதலியன அதிர்ந்தன!

சங்கு முதலியன ஒலித்தன. அவற்றி டையே இரண்டு வெண்குடைகள் அரசன் உலாவருவதைப் போன்று எழுந்து வந்தன"

என்று கூறியுள்ளார்! ஆனால், அந்த வெண்குடைகளின் நிழலில் அரசன் அமர்ந்து வரவில்லை. அல்லது மணமகனோ மண மகளோ வரவில்லை. பின் எதற்காக மங்கலக் கருவிகள் ஒலிக்க வெண்குடைகள் பவனிவருகின்றன? வெற்றுக் குடைகள் மட்டும் வீதிகளிலே பவனிவரும் வழக்கம் இல்லை. அதனால், உண்மை என்ன வென்றால் அந்த வெண்குடைகளின் கீழ், திருமணத்தின் போது கண்ணகி கழுத்தில் கோவலன் அணிவிக்க இருக்கும் மாங்கல்யம் ஊர்வலம் வருகின்றது. ஆம் அது தாலி ஊர்வலம்.

## இன்றும் தாலி ஊர்வலம்

சிலப்பதிகாரத்தில் நாம் காணும் தாலி ஊர்வலம், இன்றைய தமிழகத்திலும், தென்பாண்டி நாட்டில் சில சாதியாரிடையே திருமணங்களில் நிகழக் காண்கிறோம். திருமணம் பெண் வீட்டில் நிகழ்வதும், திருமணத்திற்கு முதல் நாள் இரவில் மணமகன் வீட்டார், தாலியையும், கூரையையும் (புத்தாடை) பெண் வீட்டிற்கு ஊர்வலமாகக் கொண்டு செல்வதும் மரபாக இருக்கிறது. ஏனைய எல்லாருடைய திருமணத்திலும் கூட, மணமகள் கழுத்தில் மணமகன் தாலி அணிவிக்கும் முன்பு, அந்த மங்கல நாண் அவையில் குழுமியிருக்கும் எல்லோருக்கும் காட்டப்பட்டு, அவர்களது ஆசியைப் பெறக் காண்கிறோம்.

## சப்தபதி சடங்கு

பொதுவாக, சங்ககாலத் தமிழர்களின் திருமணங்களில், சாத்திரப்படியும் சட்டப் படியும் முக்கியத்துவம் பெற்றது சப்தபதிச் சடங்கேயாகும்! மணமக்கள் மணவறை யிலே ஏழடி வைத்துத் தீயை வலம்வரும் சடங்கு நிகழ்ந்தால் மட்டுமே திருமணம் சாத்திரப்படியும் சட்டப்படியும் செல்லுபடி யாகும்!

அதனால்தான், சிலப்பதிகாரத்திலும், அதற்குப் பின் வந்த தமிழ் இலக்கியங் களிலும், சப்தபதிச் சடங்கு – அதாவது மணமக்கள் தீயை வலம்வரும் நிகழ்ச்சி மட்டும் குறிப்பிடப்பட்டு தாலி அணிவிக்கும் சடங்கு கூறப்படாமல் விடுபட்டுள்ளது. இதுபோல், இராமாயணத்திலும், எண்ணற்ற

இடங்களில் "மங்கலநாண் – தாலி" என்று குறிப்பிட்டுள்ள கவியரசர் கம்பரும், சீதை, இராமன் திருமணத்தின் போது தாலி அணிவிக்கும் சடங்கு நிகழ்ந்தது பற்றிக் கூறவில்லை என்பது நாம் நினைவில் கொள்ளத்தக்கதாகும்!

ஆதலால், சப்தபதிச் சடங்கு நடந்தது என்றாலே, திருமணத்தில் மணமகள் கழுத்தில் மணமகன் தாலி அணிவித்துள்ளான் என்றுதான் அர்த்தம் என்று பல்வேறு நிகழ்வுகளை எடுத்துக் காட்டி விளக்கியிருக்கிறார் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.அவர்கள் தாம் எழுதிய "சிலப்பதி காரத் திறனாய்வு" என்ற நூலில். தமிழர்களின் தனித்த பண்பாடுகளைப் போற்றி வளர்த்துவந்த தலையாய தமிழறிஞரான மறைமலையடிகளாரும், பண்டைக் காலத்தில் தமிழர் திருமணங்களில் தாலிகட்டும் சடங்கு நிகழ்ந்து வந்ததாக நம்பி வந்துள்ளார்.

அவர் எழுதியுள்ள "தமிழர் மதம்" என்ற நூலில், சங்ககாலத் தமிழர் வாழ்க்கை நெறியை ஒட்டி, தற்காலத் தமிழர் திருமணச் சடங்குகளை நடத்த வேண்டும் என்று கூறுகின்றார். அந்நூலில் "பண்டைய திருமணச் சடங்கை இப்பொழுது நடத்தும் முறை" என்ற தலைப்பின்கீழ்....

"அம்மையப்பர் வழிபாடு நடந்தபின், அம்மையப்பர் எதிரே, ஒரு தட்டத்தில், பூ, மஞ்சள், திருநீறு, குங்குமத்துடன் தாலி கோத்து வைத்த மங்கல நாணை ஆசிரியன், மாதரார் நால்வர் கையில் எடுத்துக் கொடுக்க, அவர்கள் அதனை மணமகன் கையில் கொடுக்க, மணமகன் அதனை மணமகள் கழுத்தில் பூட்டல் வேண்டும்" என்று கூறியுள்ளார்.

மேலும் பேராசிரியர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களும், பழக்காலத் தமிழர் திருமணங்களில் தாலிகட்டும் சடங்கு நிகழ்ந்ததாகவே கருதுகின்றார்.

ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் மணமகளுக்குத் தாலிகட்டும் வழக்கம் நிகழ்ந்து வருகிறது. இதைச் சிலப்பதிகாரத்திலேயே காணலாம். கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில் கண்ணகி, தன் மங்கல அணியான தாலியைத் தவிர, வேறு எந்த அணியையும் அணிந்திருக்கவில்லை என்று சிலப்பதி காரத்தில் கூறப்பட்டுள்ளது. ஆதனால், தாலிகட்டும் வழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதன்று! தொன்றுதொண்டே இருந்து வருகிறது.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் எழுதிய "தமிழர் திருமணநூல்" 16–7–39இல் வெளிவந்துள்ளது. அதனை, மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், திரு.வி.க. போன்ற முப்பது பெரும் புலவர்களுடைய ஆதரவு உரையோடு தமிழர் வாழ்க்கைக் கழகத்தார் வெளியிட்டுள்ளார்கள்.

அதில், பதினாறு வகை சடங்குகளையும் தமிழருக்கு வைத்துள்ளார்கள்! பத்தாவது சடங்காகக் கூறப்பட்டுள்ளதிலே, அறிஞர் தாலியை வாழ்த்தித்தர, மணமகன் அதனை மணமகள் கழுத்தில் அணிவித்தல்" என்று ஒரு கட்டளையும் உள்ளது. அதனால், தமிழர் திருமணத்தில் தாலி உண்டு என்ற கருத்து உறுதியாகிறது!

**சங்க இலக்கியச் சான்றுகள்**

சங்க இலக்கியங்களான நெடுநல் வாடையிலும், புறநானூற்றிலும் தாலி காணப்படுகிறது. பாண்டியன் நெடுஞ் செழியன் போருக்குச் சென்றிருந்த போது, பிரிவாற்றாமையால் கோப் பெருந்தேவி,

> **"ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்துப்**
> **பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து"**

வருந்தினாள் என்று, மதுரைக் கணக்கா யனார் மகன் நக்கீரனார் பாடியுள்ளார். இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் "பின்னமை நெடுவீழ்" என்பதற்கு "குத்த லமைந்த நெடிய தாலி என்று பொருள் கூறியுள்ளார். புறநானூற்று பாடல் 127 இல் 'ஈசையரிய இழையணி மகளிரோடு' என வரம் சொற்றொடர்களும் "பிறிதோர் மணிகளுமின்றிக் கொடுத்தற்கரிய மாங்க லியத்தை மட்டும் அணிந்த மகளிர்" என்று பொருள் கூறினார் உரையாசிரியர். ஆம், 'ஆய்' என்ற வள்ளலின் மனைவியர் தங்கள் கழுத்தில் அணிந்திருந்த தாலியைத் தவிர மற்றைய அணிகலன்களையெல்லாம் பரிசிலர்க்கு வழங்கிவிட்டனராம். மேற் சொன்ன புறநானூற்று வரிக்கு,

"எந்த நகையைக் கழற்றிக் கொடுத்தா லும் மங்கல நாணாகிய தாலியை மட்டும் மங்கையர் கழற்றும் வழக்கம் இல்லை! அதனாலேயே "ஈகையரிய இழைமணி மகளிர் என்ற தொடர் எழுந்தது" என்பதாக திரு.துடிசைக் கிழார் அ.சிதம்பரனார் பொருள் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் மங்கல அணி என்று வழங்கப்படுவதுதான், பிற் காலத்தில் தாலி என்ற சொல்லலால் அழைக்கப்பெற்றது. கம்பராமாயணம், பெரிய புராணம், வில்லி பாரதம் ஆகிய காப்பியங்களிலே மங்கல நாண், மங்கல அணி, மங்கல நூல், மங்கலத் தாலி என்னும் பெயர்களால் திருமண நாளில் மணமகனால், மணமகளுக்கு அணி விக்கப்படும் அடையாளச் சின்னம் குறிக்கப்படுகின்றது.

ஆதலால் சிலப்பதிகாரத்திலும், அதற்கு முற்பட்ட சங்க காலத்திலும், தமிழர் திருமணத்தில் தாலியணிவிக்கும் சடங்கு நிகழ்ந்துள்ளது என்பதற்கு மேற்கூறிய இலக்கியக் காட்சிகள் சிறந்த சான்றுகளாகும்!

# அன்னம் சுத்தமானால் எண்ணம் சுத்தமாகும்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

தாயைப் போல் பிள்ளை, நூலைப் போல் சேலை என்பது தமிழ்ப் பழமொழி. அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் என்பதும் தமிழ்ப்பழமொழி. ஒரு மனிதப் பிறவி அடைவதற்கு ஓர் புருஷனும் பெண்ணும் இன்றியமையாதவர்களாகிறார்கள். தாய், தந்தையர் எப்படி இருப்பார்களோ அப்படித்தான் அவர்களது குழந்தைகளும் வளரும் என்று சாஸ்திரம் அறநூல் விஞ்ஞானம் கூறுகிறது. பெற்றோர்கள் சாந்தமாகவும் நல்ல குணங்கள், பண்புகளுடன் வாழ்ந்து வந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் நல்லதாகவே இருக்கும். பெற்றோர்கள் மனதில் காமம், க்ரோதம், லோபம் போன்ற தீய குணங்கள் இருந்தால் அவர்கள் குழந்தைகள் பிறந்தது முதலே அப்படியிருப்பர் என்பது தியரி. சில சமயம் பெற்றோர் நல்லவர்களாக இருந்தாலும், பூர்வஜென்ம விதியின் காரணமாக மாறுதலாகப் பிறப்பதற்கும் வாய்ப்புண்டு. ஆகவே மனிதப் பிறவி வருவதற்கு பெற்றோர்களின் குணநலன்கள் விதிப் பயன் இரண்டும் காரணமாகிறது.

### ஆஹார சுத்தே ஸத் - த்வ சுத்தி

இன்று நாம் படும் அநேக இன்னல்களுக்குக் காரணம் வெளிநாட்டுப் பழக்க வழக்கங்களையே நாமும் காப்பி அடிப்பதுதான். இவற்றில் ஒன்று, பயிர் பச்சைகளுக்கு இரசாயன எரு (Chemical Fertiliser) போடுவது. இந்த வழக்கத்தை விட்டு இயற்கையான எரு உபயோகித்தாலே போதும், நம் தேசத்துக்கே விசேஷமான ஞானத்தைத் திரும்பப் பெறுவதில் முன்னேறி விடுவோம்.

நம்முடைய மனசு, எண்ணங்கள் சுத்தமாக இருக்கவேண்டுமானால், நாம் உண்ணும் உணவு தூயதாக இருப்பது மிகவும் அவசியம். தானியத்தையும், காய்கறிகளையும் சமைக்கிறபோதில் அவற்றில் பல விதமாகக் தூய்மைக் குறைவு உண்டாவது ஒரு பக்கம் இருக் கட்டும். முதலில் அந்தத் தானியங்கள், அல்லது காய்கறிகளே எப்படி விளைச்சல் செய்யப்பட்டன என்று கவனிக்க வேண்டும். இரசாயன உரம் போட்டு விளைவிக்கும் பயிர் பச்சைகள் சுத்தக் குறைவானவை தாம்.

பசும் சாணத்தை உரமாக உபயோகிப்பதுதான் நம் பழைய வழக்கம். பசு ஸத்வ குணம் நிறைந்த பிராணி. எனவே அந்த உரத்திலிருந்து விளைந்த பயிரும் நமக்கு ஸத்வ குணம் உண்டாக உதவியது. இப்போது உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கெமிகல் / பெர்டிலைஸருக்கு மாறியிருக்கிறோம். மனசுக்கு அநுகுணமாக தேகத்தை வளர்க்கிற முறையே இதனால் மாறிவிட்டிருக்கிறது.

தூய உணவு என்றால் நன்றாகத் தீட்டி, 'பாலீஷ் செய்த அரிசியை வெள்ளை வெள்ளவெளேரென்று சமைத்துப் போடுவது அல்ல. பலவிதமான எச்சில், துப்பல், அநாசாரங்களைச் செய்துகொண்டே ஒரு லாண்டரியில் துணியை வெள்ளை வெளேரென்று ஆக்கக் கொடுத்துவிட்டால், அதை மடி என்று வைத்துக்கொள்வோமா? எனவே பார்வைக்கு வெளுப்பாக இருந்து விட்டாலே ஒன்றை நல்லது என்றோ, தூயது என்றோ,



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஆசாரமானது என்றோ சொல்லமுடியாது. வெளியில் சுத்தமாகத் தெரிவது வேறு, உள்ளே புனிதமாயிருப்பது வேறு.

சமைக்கிறவனின் மனோபாவம், அவன் சமைக்கிற உணவில் இறங்கி, அதை உண்பவன் உள்ளும் சென்று விடுகிறது. ஸத்வகுண அபிவிருத்திக்கு உதவுகிற உணவுகள் என்று கீதை மற்றும் சாஸ்திரங்கள் சொல்லியுள்ள வஸ்துகளை நல்ல ஸத்சிந்தனையோடு சமையல் செய்து போட்டால் அது போஜனம் செய்கிறவனுக்குச் சித்த சுத்தியைக் கொடுக்கும். மற்றவர்கள் சமைக்கிற போது வெளித் தூய்மை, உள் தூய்மைகளை எவ்வளவுக்குக் கைக்கொள்கிறார்கள் என்று நாம் தீர்மானமாகத் தெரிந்து கொள்வதற்கில்லை. அதனால் அவரவரும் தானே சமைத்துச் சாப்பிட வேண்டும் என்று வைத்து, இதை “ஸ்வயம் பாகம்” என்ற ஒரு உத்தமமான விதியாக சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. பகவந்நாமங்களைச் சொல்லிக் கொண்டே அவரவரும் சமைத்துச் சாப்பிடுவது என்று ஏற்பட்டால் ஸத்வகுணம் தேசத்தில் வளர்ந்து விடும். முன் காலத்தில் மோர் சிலுப்புவது, சமைப்பது ஆகிய சமயங்களில் பெண்மணிகள் ஏதாவது ஸ்தோத்திரங்கள், தெய்வ சம்பந்தமான பாடல்கள் பாடியபடிதான் இருப்பார்கள்.

ஹோட்டல் சாப்பாடு என்று எடுத்துக் கொண்டால், அது தீட்டின் அரிசி போலவும், லாண்டரித் துணி போலவும், வெளியே பார்த்தால் அழகாக, சுத்தமாக இருந்தாலும் அதில் வாஸ்தவத்தில் சாரமில்லை. உடம்பு உள்ளம் இரண்டுக்கும் அதில் நல்லதில்லை. போஜன சாலைகளில் சமைக்கிறவர் எப்பேர்ப்பட்ட எண்ணங்களுடன் தம் காரியத்தைச் செய்வாரோ? நிச்சயமாக அவருக்கு அதைச் சாப்பிடப் போகிறவரிடம் அன்பும் நல்லெண்ணமும் பெருகப் போகிறதில்லை. விற்பனை என்று வந்துவிட்டதால், உண்கிறவருக்கு வயிராறப் போடவேண்டும் என்ற எண்ணத்துக்குக்கூட இடமில்லை.

சாப்பிடுகிறவனுக்கோ இன்னும் கொஞ்சம் கேட்கக் கேட்க அதற்குப் பணம் கொடுத்தாக வேண்டுமே என்று கவலையிருக்கிறது. அதோடு கூட தான் நிறையச் சாப்பிட்டால் பக்கத்தில் உட்கார்ந்து உண்பவர் என்ன நினைப்பாரோ என்று வேறு உண்பவருக்குக் கூச்சமாக இருக்கிறது. இதெல்லாம் தவிர, ஹோட்டல் சரக்கில் என்னென்ன கெடுதல் இருக்குமோ? நிறையச் சாப்பிட்டு விட்டால் அது வயிற்றைக் கெடுத்துவிடப் போகிறதே என்ற பயம் வேறு. வயிற்றுக்கு வஞ்சனையில்லாமல் நிறைந்த மனதோடு சாப்பிடுவதே ஹோட்டலில் முடியாமலிக்கிறது. இதனாலெல்லாம் தான் சாதாரணமாக வீட்டில் ஐந்து, ஆறு இட்லி சாப்பிடுபவர்கள் கூட ஹோட்டலுக்குப் போனால் இரண்டு இட்லிக்கு மேல் சாப்பிடாமல் வந்துவிடுகிறார்கள். உடம்புக்குப் போஷாக்குத் தருகிற அளவுக்குக்கூட, ஹோட்டல் முதலான வெளியிடங்களில் சாப்பிட முடிவதில்லை. சித்த சுத்திக்கோ அது துளிகூட உதவுவதில்லை.

ஹோட்டலிலேயே (அல்லது அது போன்ற வெளி விடுதிகளிலேயே) சாப்பிட்டவர்கள், ஒரு வாரம் அல்லது பத்து நாள் நல்ல அக-புறச் சூழலில் தயாரித்த வீட்டுச் சாப்பாட்டை பந்துக்களோடு சேர்ந்து ஆனந்தமாகச் சாப்பிட்டால் தெரிந்து கொள்வார்கள். சித்தத்துக்கு எவ்வளவு தெளிவு பிறக்கிறதென்று. வீட்டிலேயே மனைவி பரிமாறுவதைவிடத் தாயார் பரிமாறும் உணவுக்கு விசேஷம் அதிகம்.

# தீபாவளி ஏன் கொண்டாடப்படுகிறது

**நா. விட்டல் அவர்கள்**

இந்தியத் திருநாடு முழுக்கக் கொண்டாடப்படும் பண்டிகை ஒன்று உண்டென்றால் அது 'தீபாவளி' தான் என்று எளிதாகச் சொல்லலாம். தீயதை அழித்தொழித்து நல்லது நிலைத்திருக்கும் என்பது தான் தீபாவளி நமக்குத் தரும் செய்தியாகும். தீயவற்றை அழித்து, நல்லவற்றைக் காத்து, தர்மத்தை அல்லது நல்ல நெறிகளை நிலைநாட்ட இந்தப் பூமியில் மீண்டும் மீண்டும் அவதரிப்பேன் என்கிற இந்தப் பிரபஞ்சத்தின் காக்கும் தெய்வமாக விளங்கக்கூடிய நாராயணனின் அழிவில்லாத நற்செய்தியினையும், தீயவற்றின் உருவகமாக விளங்கிய நரகாசுரனின் அழிவையும் நாம் கொண்டாடுகிறோம்.

குறிப்பாக, இந்த வருட தீபாவளியில், நாம் விரும்பிப் பார்க்க இன்னுமாரு க்காரணமும் உண்டு. அது என்னவெனில், தீமையை நன்மை வெற்றிகொள்ளும் என்கிற செய்தியோடு, இந்தியாவின் சுதந்திர வைர விழாவினையும் நாம் கொண்டாடுகிறோம். உலகின் மிகப் பழமையான நாகரிகங்களில் ஒன்றாக இருப்பது, அதே நேரத்தில் உலக நாடுகளில் உள்ள இளமையான நாடுகளில் ஒன்று என்பது நமது தனித்த சிறப்புகளாகும். பழமை வேர்களின் பண்பாடு மற்றும் மரபு சார்ந்த புதிய ஆட்சி முறை என்கிற இணைவு நமது நாட்டின் தனித்த சிறப்பியல்களில் ஒன்றாகும்.

பழமை மற்றும் புதுமையைப் பற்றி நினைக்கின்ற போது, ஊடகங்களில் அடிக்கடி வெளிச்சமிட்டுக் காட்டக்கூடிய இன்னுமொரு அம்சம். பில்லியனுக்கு மேலுள்ள இந்திய மக்கள் தொகையில் 55% பேர், மேலும் குறிப்பிடத் தகுந்தளவு மக்கள் இளமையானவர்கள். அதுவும் 35 வயதிற்கும் குறைவானவர்கள், இந்தியா இளைஞர்களின் தேசம் என்று பெருமிதப்படுகிற வேளையில், வளர்ந்த நாடுகள் என்று சொல்லப்படுகிற அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு வயதாகிக் கொண்டே இருக்கிறது. இளமை எப்போதும் நம்பிக்கையையும் செயல் ஆற்றலையும் குறிக்கிறது. இந்த இளமையான மக்கள் தொகையும், புதிய அரசு முறைகளும் நம்மை மகிழ்ச்சிகொள்ளச் செய்வதோடு குறிப்பாகத் தீபாவளியின் போது நம்பிக்கையோடு வாழ உதவுகிறது. இந்த இணைவு, மிகவும் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தாலும், அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தது ஒவ்வொரு துறையிலும் ஊழல் என்பது ஒரு வாழ்க்கை முறை போலவே மாறிவிட்ட நிலை கொண்ட ஆட்சிமுறையை நாம் கொண்டிருக்கிறோம்.

உலகத்திலேயே ஊழல் மிகுந்த நாடுகளில் ஒன்றாக நமது நாடு விளங்குகிறது. ஊழலின் ஊற்றுக் கண்ணாக விளங்குவது அரசியலில் ஊழல், அதுவே வணிகத்தில் ஊழல், அதிகார வர்க்கத்தில், அரசு சாராத அமைப்புகளில் என்று வட்டமிட்டு, இறுதியாக அரசியலைக் குற்றவாளிகளின் கூடாரமாக மாற்றி வருகிறது.

இதன் காரணமாக, நமது நாட்டில் ஒவ்வொரு ஊடகத்திலும் இரண்டு வகையான செய்திகள் உலாவருவதை அறிகிறோம். முனைப்போடு முன்னேறி வருகிற துறைகளான தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு ஆகியவற்றில் நமது வெற்றியை வெளிச்ச மிடுகிற அதே நேரத்தில் உயர்ந்த பதவி களில் இருப்பவர்களும் ஊழலில் சிக்கித் தவிக்கிற செய்திகளும் தொடர்ந்து வந்து கொண்டேதான் இருக்கின்றன. ஒரு கபினற் மந்திரிக்கே கொலைக் குற்றத்திற் காகத் தண்டனை வழங்கப்பட்டு அதனால் அவர் பதவியை இராஜினாமா செய்தது உலகின் மிகச் சில நாடுகளில் ஒன்றாக இந்தியாவிலும் நிகழ்ந்ததாகும். அமைச் சர்களுக்குக் குறிப்பிட்ட சதவீதத்திலான மக்கள் பிரதிநிதிகளும் கொலைச்சதி மிரட்டுதல் மற்றும் வன்முறை ஆகிய குற்றங்கள் புரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டு நீதிமன்ற படிகளில் ஏறி வருகிற நிலையைக் காண்கிறோம். உபநிடதங் களில் தெரிவிக்கப்பட்ட சத்யம் வதா தாமம் சரா (உண்மையைப் பேசு; தரும நெறியைக் கடைப்பிடி, என்பன போன்ற மரபு சார்ந்த உயர்ந்த கொள்கைகளை நினைவு கொள்கையில், தற்போதைய நிலை மிகவும் அருவருக்கத் தக்கதாகவே உள்ளது. சரியாகச் சொல்லவேண்டு மெனில் இந்திய அரசின் குறிக்கோள் வாசகமான 'சத்யமேவ ஜயதே' (வாய் மையே வெல்லும்) என்பதே முண்டக உபநிடதத்திலிருந்து எடுத்தாளப்பட்ட தாகும்.

இந்த விவாதம் நம்மை ஒரு அடிப்படைப் பிரச்சினைக்கு அழைத்துச் செல்கிறது. நாம் இன்று உண்மை பேசுவதைப் பற்றிச் சொன்னால், ஊழ லுக்கு எதிராகப் போராட வேண்டும் என்றால் அல்லது நல்லொழுக்க வாழ்வை நடத்தவேண்டும் என்று பேசினால், இன்றைய சூழலில் அதற்கு மதிப்பு ஏதும் உண்டா? பல முறை 'ராமகிருஷ்ண மிஷன்' போன்ற கல்வி நிறுவனங்கள் இளைய தலைமுறையினரிடையே உரை யாற்றச் சொல்லி என்னை அழைத் துள்ளனர். இன்றைய இளைய தலை முறையைப் பார்த்து உண்மையைப் பேசுங்கள், ஒழுக்கமாக வாழுங்கள் என்று போகிற போக்கில் சொல்ல முடியாது. ஏனெனில் அவர்கள் (மழலை யர் பள்ளி சேர்க்கையில் தொடங்கி), தங்களைச் சுற்றி எல்லாவிதமான ஊழல்களையும் காண்கிறார்கள். அது மட்டுமன்றி ஊழல் செய்பவர்கள் தண்டிக் கப்படாததோடு மிகவும் செழிப்பாக வாழ்வதையும் காண்கிறார்கள். நமது நாட்டில், ஊழல் என்பது குறைந்த சாவல் கொண்ட அதிக லாபம் ஈட்டக்கூடிய ஒரு தொழிலாக மாறிவிட்டது. இந்தச் சூழ்நிலையில், ஒரு இளைஞன் ஏன் நேர்மையானவனாக இருக்கவேண்டும்?

நான் பொதுவாக இளைஞர்கள் வெற்றி பெறுவதற்கு இரண்டு அம்ச திட்டம் ஒன்றைக் கடைப்பிடிக்கச் சொல்வது வழக்கம். முதல் அம்சம் ஒவ்வொரு வருக்கும் கடவுளிடம் தீவிர பற்றுதல் இருக்கவேண்டும். நம்மில் பெரும்பா லோர்க்கு இது இயற்கையிலேயே வரும். ஏனென்றால், அன்றாட வாழ்க்கை முறை யாகவே ஆன்மீகத்தைப் பாவிக்கிற நாடு நம்முடையது. திறந்த மனது கொண்ட மரபையும் நாம் வழிவழியாகப் பெற்றி ருக்கிறோம். உண்மையைச் சொல்லப்

போனால், அமெர்த்தியா சென்னின் "ஆர்கியூமென்டேடிவ் இந்தியன்" (Argumentative Indian) எனும் புத்தகம், நமது நாடு மனம் திறந்த விவாதத்தினையும், கருத்துப் பரிமாற்றத்தையும் எந்த அளவு ஊக்கப்படுத்தியிருக்கிறது என்பதை அழகாகப் படம் பிடித்திருக்கிறது. வாழ்வின் மிக முக்கிய அம்சங்கள் குறித்து பகவான் கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் நிகழ்கிற நீண்ட உரையாடல்தான் 'பகவத் கீதை'. என் சொந்த அனுபவத்திலிருந்து ஒருவருக்கு கடவுளிடம் உண்மையான பக்தி இருக்குமானால் அவர் எப்போதும் நம்பிக்கை இழப்பதில்லை என்பதைக் கண்டு கொண்டேன்; 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்கிற பழமொழி சொல்கிற மாதிரி, வாழ்வின் மோசமான தருணத்தில், கடவுள் மீதான நம்பிக்கை என்பது வலிவும் நம்பிக்கையும் தருகிற நங்கூரமாக இருக்கிறது.

ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையை ஒழுக்கமுடையதாக வைத்துக் கொள்வது என்பதுதான் நான் இரண்டாவதாக உரத்துச் சொல்கிற அம்சமாகும். நான் மத்திய விழிப்புணர்வு ஆணையத்தின் ஆணையாளராகப் பணியாற்றிய போது தற்செயலாக இதைக் கண்டறிய நேரிட்டது. துறை அளவிலான விசாரணைகளில் ஊழல் குற்றம் நிரூபிக்கப்பட்ட பொது ஊழியர்களின் பெயர்களை மத்திய விழிப்புணர்வு ஆணைத்தின் இணையத் தளத்தில் வெளியிட்டேன். இதற்கு அதிகார வர்க்கத்தில் இருந்து எனக்குப் பலத்த எதிர்ப்பு இருந்தது. ஊழலை வெளிக் கொணர்வதற்கு இணையதளம் பயன் படுத்தப்பட்டது உலகிலேயே இதுதான் முதல் முறை. 'நியூஸ் வீக்' இதழின் செய்தியாளர் சுதீப் மஜும்தார் 'இணையதள அசிங்கம்' (e-shame) என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அதற்கான வேலைகளில் அவர் ஈடுபட்டபோது, என்னைத் தீவிரமாக எதிர்த்த பல அதிகாரிகளைச் சந்தித்ததாகப் பிறகு அவர் என்னிடம் தெரிவித்தார். பிறகு அவர் எனது மதிப்பைக் குலைக்கிற மாதிரியான ஏதாவது எதிர்மறையான செய்திகள் உள்ளனவா என்று அவர்களிடம் கேட்டுள்ளார். நமக்குச் சேற்றை வாரி இறைப்பது என்பது பழகிய விஷயந்தானே? பத்திரிகைத் துறையில் இருக்கிற ஒரு நிலையான செயல்திட்டம், மோசமான செய்தி நிறைய விற்பனையாகும் என்பதுதான். வேறு இடங்களில் கூட நாம் இவ்வாறு பாரத்திருப்போம். உதாரணத்திற்கு, பெரிய நிறுவனங்களில் ஊழலை ஒழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்ட மூத்த அதிகாரிகளே அத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி வருந்துவதைப் பார்த்திருக்கலாம். எனது மோசமான எதிரிகள் கூட என்மீது வீசுவதற்கு ஒரு தூசும் இல்லை என்று சொன்னதாகப் பிறகு மஜும்தார் தெரிவித்தார். அந்தக் கணத்தில்தான், நல்ல நெறியில் வாழ்ந்ததன் மூலம், என்னை அறியாமலேயே, நான் என்னைக் காப்பாற்றிக் கொண்டேன் என்பதை உணர்ந்தேன். இதையேதான் வள்ளுவர் மிகச் சரியாகப் படம் பிடித்திருக்கிறார்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

– என்னும் குறளின் மூலமாக

இந்தச் செய்தியை, எனது வாழ்க்கையில் தாமதமாகத்தான் உணர்ந்தேன். ஆனால், ஒழுக்கமான வாழ்க்கை முறையைக்

கையாண்டால், கடவுள் மீது உண்மையான நம்பிக்கை இருந்தால் நம்மால் வாழ்க்கையில் வெற்றிபெற முடியும் என்பதை இளைய தலைமுறைக்கு என்னால் சொல்லமுடியும். கடவுள் மீதான பற்று ஒருவனுக்குத் தன்னம் பிக்கையை அளிப்பதோடு, எப்போதும் கைவிடப்பட மாட்டோம் என்கிற நம்பிக்கை யையும் தருகிறது. தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தால் நம்மை யாரும் பயமுறுத்த முடியாது என்பதை உறுதி செய்கிறது. பின்னர் நல்லெண்ணத்தின் அடிப்படையில் எடுக்கிற ஒவ்வொரு நடவடிக்கைக்கும் வெற்றி நிச்சயம். இந்த அணுகுமுறை, இளைஞர்களை ஏன் அவர்கள் தூய்மையான, நியாயமான, வாழ்க்கை வாழவேண்டும், ஏன் கடவுள்மீது பற்று வைக்க வேண்டும் என்கிற கேள்விகளுக்கு நிறைவான பதில் தரும் என்று நான் நம்புகிறேன்.

தீபாவளி போன்ற விழாக் காலங் களில், தீமையை நன்மை வெற்றி கொள்கிற விஷயத்தைக் கொண்டாடுகிற நேரத்தில் நம்பிக்கை மிகுந்த, புத்துணர்வு மிக்க எதிர்கால இந்தியாவை ஆற்றல் வாய்ந்த இளைய தலைமுறையோடு காணுகிற வேளையில், இந்தச் செய்தியைத் தான் பிரதிபலிக்கச் சொல்லி இளைஞர் களைக் கேட்க விழைகிறேன்.

*கிளிபோல இனிமையாகப் பேசு!*
*கொக்கைப் போல ஒருமையுடன் இறைவனை நினை!*
*ஆடுபோல் நன்கு மென்று உண்!*
*யானையைப் போல் குளி!*
*நாயைப் போல் நன்றியுணர்ந்து ஒழுகு!*
*காக்கையைப் போல் குறிப்பறிந்து கொள்!*
*தேனியைப் போல் உழை!*
*எறும்பைப் போல் சுறுசுறுப்பாக இரு!*
*செல்வம்பெற வேண்டின் அக்கினியை வணங்கு!*
*ஞாம் பெறவேண்டின் முருகனை வணங்கு!*
*ஆற்றல் பெற வேண்டின் அம்பிகையை வணங்கு!*
*சுகம் பெற வேண்டின் திருமாலை வணங்கு.*

*– வாரியார்*

# நாட்டியத்தின் ஆன்மிக அடிப்படை

ஸ்ரீமதி ருக்மினிதேவி அவர்கள்

**உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவன்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

நம் பாரத நாட்டில் மிகவும் புராதன மானதும், சிறப்புமிக்கதும் நாட்டியக் கலையாகும். எனக்குத் தெரிந்த வரையில் பாரதம் தான் இக்கலைக்குத் தேசிய வாழ்விலும், தெய்வீக வாழ்விலும் உன்னத இடத்தை அளித்திருக்கின்றது. இந்தப் புனிதக் கலையின் முன் ஏற்றத் தாழ்வு கிடையாது. இந்தக் கலை எல்லா ருக்கும் பொதுவானதாகும். நாட்டிய அரங்கிற்குப் "பொது" என்ற பெயரும் உண்டு. இந்தக் கலைக்கு உணர்ச்சியும், உற்சாகமும், எடுத்துக் காட்டும் ஒப்பற்ற இறைவனிடமிருந்தே தோன்றுவனவாகும். கடவுளின் அம்சமாகிய ஒவ்வொருவரும் இந்த நாட்டியக் கலையில் ஈடுபட வேண்டும். இந்தக் கலை ஒரு நாட்டுக்கு மட்டும் உரியதன்று. உலகம் முழுவதுக்குமே சிறப்பாக அமைந்துள்ளது. இந்தக் கலை உண்மையில் நிரந்தரமானது, அழிவற்றது. கடல் நீரில் பலவித வண்ணங்களுடன் ஒளிவிடும் சூரிய கிரணம் போன்றது இந்தக் கலை. வாழ்வின் தனித் தன்மை யிலிருந்து மனிதன் படைக்குந் திறனைப் பெற்றான். கலை வெளிப்படையாக இருக் கின்றது. கலையின் உண்மை உருவத்திற்குச் சூழ்நிலை மிகவும் முக்கியம். அந்தச் சூழ்நிலையே தேசிய வாழ்க்கை என்கின் றோம். நம் இந்தியாவில் நாட்டியமும் பிற கலைகளும் தெய்வீகத் தத்துவமாக அமைந்துள்ளன. இந்திய நாகரிகத்தில் இது ஒரு ஒப்பற்ற தனிச் சிறப்பாகும். நம்மால் மிகவும் உயர்ந்தவற்றை அறிய முடியுமானால் மிகவும் தாழ்ந்தவற்றையும் அறியமுடியும். ஏனெனில் இரண்டும் ஒன்றாகும்.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் நாட்டியக் கலையின் பாரம்பரியம் நம் நாட்டில் நிலவி வருகின்றது. நாட்டியம் மட்டுமே தனிக்கலை ஆகாது. உடலின் மூலமாக எல்லாக் கலைகளையும் இணைப்பது நாட்டியம் ஆகும். உண்மை யில் உடலின் தன்மை கலைக்கு உடன் பட்டாலும் அது தாமச இயல்பை உடையது. அதன் உள்ளுணர்வை வெளிப்படுத்தும் தன்மையையே நாம் நாட்டியம் என்கின் றோம். எனவே உடலும், உணர்ச்சியும் நாட்டியத்தைத் தோற்றுவிக்கின்றன.

உணர்ச்சி எவ்விதம் தோன்றுகின்றது. நாட்டியம் விரைவில் வளைந்து கொடுக்கும் தன்மையால் பாதிக்கப்படுகின்றது. இதைத் தூண்டுவது ஒலியாகும். சங்கீதத்தில் ஒலி அசைவு மூலம் தன் இயல்பை விளக்கு கின்றது. யோகியர்க்கும் பரமயோகியான நடராஜ மூர்த்தத்திலிருந்து இவை அற்புத மாக மக்களுக்கு உணர்த்தப்படுகின்றன. அவனிடம் எத்தகைய ஞானமும், கலைகளும் ஒன்று சேர்ந்து குடிகொண்டிருக்கின்றன.

நாட்டிய உணர்வு நாகரிக மக்களிடமும் அநாகரிக மக்களிடமும் இருப்பதைக் காண்கிறோம். நாட்டியம் எல்லாருக்கும்



பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

இன்பமளிக்கும் கலையாக மாறும்போது அதனிடம் தெய்வத் தன்மை ஏற்படுகின்றது. எல்லாச் சுவையினருக்கும் இந்தக் கலை இன்பமளிக்கின்றது. நாட்டியத்தில் சங்கீத வித்வான் அனுபவிக்கும் இசை உண்டு. நாட்டியமே உடலுக்குச் சங்கீதமாக அமைகின்றது. சங்கீதமும், சாகித்தியமும், இசையும் பிறவாத்தியங்களின் உதவி யோடு சேர்ந்தால் அது முழுமையான சங்கீதம் என்று கூறப்படுகினறது. சங்கீ தத்தில் நாட்டியம் உள்ளது போல நாட்டி யத்தில் சங்கீதம் இருக்கின்றது. சங்கீத உணர்ச்சியின்றி நாட்டியமும் இயங்கமுடி யாது. ஏனெனில் சங்கீதமே உயர்ந்த உணர்ச்சி பாவங்களுக்கு இயல்பாகவும், அசைவுகளாலும், அபிநயத்தாலும் அதன் இருப்பிடமாகின்றது. சங்கீதத்தைக் கை முதலிய அபிநயத்தாலும் முகபாவத்தாலும் மற்ற அங்க அசைவினாலும் தெரியப் படுத்துவதன் மூலம் நாட்டியம் ஆடுபவர் மற்றொரு கலையை வெளிப்படுத்துகின்றார். அதுவே நாட்டியம் அல்லது நாடகக் கலை யாகும். பின்னர் நாட்டியமாடுபவர் கதை சொல்பவராகவும் நடிப்பவராகவும் மாறு கின்றார். கதையைச் சொல்வதற்கும் நாட கத்திலுள்ள ஒரு பாத்திரத்தை விளக்கு வதற்கும் ஆடை முதலிய வேடங்களே ஒரு அபிநயமாகும். இது நான்கு முக்கிய பிரிவுள்ள நாட்டியத்திற்கு ஓர் அம்சமாகும்.

தனியாக ஆடும் பரத நாட்டியத்தில் நிருத்யம் ஆடுபவனும் கதை சொல்வான். தவிர நாட்டியத்திற்கேற்றவாறு ஆடை களும், அணிகலன்களும் அணிந்து கொள் வான். பகட்டின்றிச் சாதாரண ஆடை களையே அணிவான். ஆனால் நாட்டியம் ஆடுபவன் அழகாக இருப்பதன்றித் தான் கூறும் கதை பிறரை வசீகரிக்கச் செய்யும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். அவனுடைய கலை நாட்டிய உருவத்தில் உள்ள சங்கீதமே ஆகும். அவனிடத்தில் ஒவ்வோர் உணர்ச்சியும் ஒவ்வோர் பாத்திர மும் அடங்கியுள்ளன. நாட்டிய நாடகத்தில் நடனமாடு பவர் ஒரு தனியான பாத்திர மாக இருந்தால் ஆடையின் தன்மை ஒரு ரசத்தை அல்லது அடிப்படையான ஒரு பாவத்தை விவரிக்கும். உண்மையாக விளக்குவதற்குத் தன்னுடைய அனுபவமே சாதனமாக உள்ளது. இது தெய்வீக வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தெளி வாக விளக்கும்.

ஆகவே நாட்டியம் மற்றைய கலை களை ஒருங்கிணைக்கும் பாலமாகும். சித்திரத்திற்கு வண்ணம் பூசுபவர் வண் ணத்தையும் அழகையுமே நோக்கிக் கொண்டிருப்பார். சிற்பக்கலை நிபுணர் அழகான வடிவம் உருவாக்குவதையே இலட்சியமாகக் கொண்டிருப்பார். நடிகர் வாழ்க்கையின் பிரதிபலிப்பைத் தோற்று விப்பார். இசைவாணர்களும் கவிஞர் களும் பாடலின் தன்மையைக் கவனிப் பார்கள். உடலையும் ஆன்மாவையும் அர்ப்பணம் செய்து மேற் குறிப்பிட்ட தகுதிகள் ஒரு நாட்டியக்காரனுக்கு இருக்கு மாகில் அவனே நடராஜ தத்துவத்தின் உணர்வு ஆகிவிடுவான். அவனுடைய அங்கங்களாக, அங்கங்களின் அசைவு களாக உலகம் இயங்குவதாக விவரிக் கின்றனர். அவன் ஆடை அணிகலன்கள் (அஹர்யம்) நிலாவும் நடசத்திரங்களு மாகும். சிவமே சாத்வீகத்தின் உண்மை உணர்வின் ரசமாகிவிடுகின்றது. அவ னிடம் எல்லாம் ஒன்றாக இருக்கின்றன. அவனிடமிருந்தே எல்லாம் தெய்வீக உணர்வுடன் தோன்றுகின்றன. இதுவே

நாட்டியம் எனப்படும். இதுவே நம்முடைய பாரம்பரியமாகும்.

இந்தக் கண்ணோட்டத்தில் நாம் இன்னும் இந்தியாவில் உண்மையான நாட்டியத்தைக் காணலாம். பரத நாட்டியமே இந்தியாவிலுள்ள எல்லா நடனத்துக்கும் வேரும், மூலமும் ஆகும். இந்தியாவில் எல்லா நாட்டியமும் பரத நாட்டியத்தின் சாரமே ஆகும். ஆனால் ஒரு சாரார் மட்டும் அந்தக் கலைக்குப் பரத நாட்டியமென்று பேர் வைத்துள்ளனர். பரத முனிவருடைய நாட்டிய சாஸ்திரமே மிகவும் பழமையான ஆதார நூலாகும். தென்னிந்தியாவில் தஞ்சாவூர் பரத நாட்டியக் கலையின் பள்ளியென்று அறியப்பட்டாலும் காஞ்சிபுரமும், பிற இடங்களும் இந்தக் கலையை அதற்குச் சமமாகப் பயிற்சிபெறப் பெருமை பெற்றவையாகும். ஒவ்வொரு கோவிலிலும் எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் நாட்டியம் இடம்பெற்றிருந்தது. இந்தக் கலை உடற்கவர்ச்சியை மட்டும் கருதித் தெய்வீக நிலையை மறந்துவிட்டதால் அழியக்கூடிய நிலையில் இருந்தது. ஆனால், உலகம் யாரைப் புறக்கணித்ததோ அவர்களின் பக்தியினாலும், நாட்டியத்தின்பால் உள்ள உண்மைத் தன்மையாலும் இந்தக் கலை அழியாமற் பாதுகாக்கப் பெற்றது.

இந்தியர்கள் மனோபவத்தில் பாத்திர இயல்பும், நாட்டியமும் இணைந்தே செல்கின்றன. உண்மையில் அவை இரண்டும் ஒன்றே. ஒன்றின்றி ஒன்று உட்படாமல் இயங்க இயலாது. இறைவன் இறைவியின் வேடங்கள் புனைவதே ஒருவனைத் தெய்வீக முள்ளவனாக்குகின்றது. இந்திய நாட்டியம் தெய்வீகம் பொருந்தியுள்ளதால் அது ஆன்மீக வளர்ச்சிக்குப் பொருத்தமாக உள்ளது. பாவங்களின் மூலம் ஒருவன் கதைகளில் காணும் கடவுளின் தன்மையைச் சித்தி ரித்துக் காட்டுகின்றான். இந்திய மேதைகள் மனிதப் பண்பே தெய்வம் என்றும் தெய்வீகத் தன்மையே மனித இயல் என்றும் காட்டியுள்ளனர். எனவே இறைவனும், இறைவியும் புராணங்களில் மனிதனைப் போல வாழ்ந்து பேசுகின்றனர். இவ்வாறு இந்தியா முழுதும் நாட்டியம் இருந்து வருகின்றது. தஞ்சாவூரில் பாகவதர்களில் (ஆண் நடிகர்கள்) நாட்டிய நாடகமும், ஆந்திர நாட்டில் குச்சிப்புடியும், மலையாளத்தில் சாக்கியார் கூத்தும் இன்னும் நிலவி வருகின்றன. இவற்றின் மூலமாகவும், இன்னும் கேரளத்தில் நிலவி வரும் கதகளி மூலமாகவும் சமயமும், தத்துவமும், கலையும் வாழ்ந்து வருகின்றன.

நாம் நம்முடைய பரம்பரைச் செல்வத்தை மறந்துவிட்டபடியால் கலைச் செல்வம் ஏறக்குறைய மறையும் நிலைக்கு வந்துவிட்டது. இன்று அந்தக் கலையின் சிறப்புக்குத் திடீர் என விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, மக்கள் எங்குப் பார்த்தாலும் நாட்டியக் கலை பற்றியே சிந்திக்கவும், பேசவும் ஆரம்பித்துள்ளனர். நாட்டியம் நம் வாழ்வின் முன்னேற்ற சாதனமாக இருப்பதால் ஒரு தெளிவான மாறுதல் இந்த நாட்டியக் கலையில் ஏற்படவேண்டும். இந்தியக் கலைகள் பொதுவாகக் கீழ்நிலையுற்று வருகின்றன. அநாகரிகமான பண்பாடற்ற அம்சங்களை இந்தக் கலைகளில் புகுத்தி வருகின்றனர். சாதாரணமாக இராமாயண மகாபாரதக் கலைகளைக் கொண்ட நாட்டியங்களே அநாகரிகமாக நடிக்கப்பெற்று வருகின்றன. சில சமயங்களில் மிகவும் ஆபாசமாகவும் நடிக்கப் பெறு





பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

கின்றன. கடினமாக உழைத்து நல்ல யோசனை செய்து பக்தியுடன் நாட்டியங் களை உருவாக்க வேண்டும். பக்தி இன்மை யால் ஒழுங்கு இல்லை. அதனால் இந்தக் கலையின் சிறப்பு அம்சங்கள் கைவிடப்படு கின்றன. இதனால் உணர்ச்சிப் பாவமே இல்லை என்னும் முடிவு ஏற்படுகின்றது. உள்ளிருந்து பொங்கிவரும் உணர்ச்சி களுக்குப் பதிலாக வெளியே இருந்து பெறும் உற்சாகத்தை எதிர்பார்க்க வேண்டி யுள்ளது. இதனால் விமர்சனத்தின் தரமே குறைந்து போகின்றது. இன்றைய கலை அன்னியர்களைப் பார்த்துக் கொப்பி அடிக்க நேரிடுகின்றது. உண்மையான கலை பிறரிடம் இருந்து தோன்றாது. தன்னுள் இயல்பாகவே தோன்றவேண்டும். ஆழமான கிணற்றிலிருந்து புதிய நீர் ஊற்றுக்கள் எப்படித் தோன்றுமோ அதே போலப்புதிய புதிய இலட்சியங்களும், எண் ணங்களும், நோக்கங்களும் தனக்குள்ளே தோன்ற வேண்டும். நமது பாரத தேசம் நட னத்தை ஆனந்த வடிவாகக் கருதுகின்றது. அதனால்தான் நடராஜப் பெருமானின் நடனத்தை ஆனந்தத் தாண்டவம் என்கின் றோம். இதுவே யோகிகளின் ஆனந்தம். யோகிகளின் தன்மை எவ்வாறு உள்ளது? தன் உடலை மறந்த ஒருவரே யோகியாவார். அந்தத் 'தன்னை மறக்கும் நிலை' வெறுப் பினால் ஏற்படவில்லை. தன்னையே தன் வயப்படுத்தும் சக்தியினால் ஏற்பட்டதாகும். உடலுக்கு நன்கு பயிற்சியளிப்பதன் மூலம் பக்குவப்படுத்திய பிறகே ஒருவன் அதை மறக்கின்றான். ஒரு கலை மற்றொரு கலையை மறைப்பதன் தத்துவமே இது தான். எனவே நடனமும் தன்னை மறக்கச் செய்வதால் ஒரு யோகம் என்று கூறப்படு கிறது. நாடோடிக் கலைகளிற் கூட ஆனந்தம் வெளிப்படுத்தப்படுகிறது. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் நாடோடிக் கலைகள் இருக்கின்றன. தனியாக ஆடும் கலையாக வும், கூட்டாக ஆடும் கலையாகவும், நாட்டிய நாடகமாகவும் அவை இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வாழ்க்கையின் தனித்தன்மையைச் சுற்றியுள்ள சூழ்நிலை யைப் பற்றிய நினைப்புக்களை ஒவ்வொரு வகையில் பிரதிபலிக்கின்றன. ஒவ் வொன்றும் ஒவ்வொன்றிலிருந்து மாறு பட்டுள்ளன. குஜராத்தில் கர்ப, ராசலீலை, கேரளத்தில் கைகொட்டிக் களி, தமிழ்நாட்டில் கும்மியும், கோலாட்டமும், அஸாம், ஒரிசாவில் கிராமிய நடனங்கள். ஒவ்வொரு வனின் சிந்தனை நிலைக்கும் ஏற்ற வண்ணம் நாட்டியம் தாழ்ந்த நிலை யிலிருப்பவரிலிருந்து உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்கும், குழந்தைப் பருவத்தி லிருந்து வயது வந்த பருவத்தினருக்கும் சங்கீத இயக்க மூலம் இந்தக் கலை நாட்டில் நிரப்பப்படுகின்றது. இந்தியர்கள் இந்தியர்களின் சாரம் எது என்பதை எப்போது உணர்கின்றார்களோ அப்போது தான் கலை புத்துயிர் பெற்றுப் பழைய உயர்ந்த நிலையில் மக்களுக்கு மீண்டும் கிடைக்கும். நாட்டியம் புத்துயிர் பெற முயற்சி செய்யப்படுகின்றது. இந்த முயற்சி வெற்றிகரமாகத் தொடர நாம் இந்தக் கலையின் ஆன்மிகச் செய்தியை உணர்ந்து கலையை நாம் வாழ்வின் ஒரு பகுதியாக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய உண்மையான வாழ்க்கை கலைக்குத் தொண்டாற்றத் தொடங்கும். இந்தியா எழில்மிக்க நாடாக விளங்கும். இந்தக் கலையே முனிவர்கள், மனிதத் தன்மையின் பாதுகாவலர்கள் அளிக்கும் செய்தியைச் சுமக்கும் சரியான சாதனமாகும்.



மாவைக் கந்தன் வியாக்கிரசுர சங்காரத்திற்கு
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திற்கு வரும் காட்சி





ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முன்றிலில்
மாவைக்கந்தன் வியாக்கிரசுர சங்காரம் செய்யும் காட்சி





**கதிர்காம யாத்திரிகர்கள் காட்டுப்பாதை ஊடாக யாத்திரை செல்லும் காட்சி**

# தீபாவளிப் பண்டிகை

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

இந்து சமயத்தவர் பல பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். பண்டிகைகள் கொண்டாடப்படுவதனால், வாழ்க்கையில் ஒரு வகை மகிழ்ச்சியும், தெம்பும் உற்சாகமும் ஏற்படுகின்றன. ஓய்வும் கிடைக்கின்றது. ஓய்வு காலத்தை நற்சிந்தனை, நற்செயல்களில் கழிக்கவும் உதவுகின்றன. வாழ்க்கையில் சில மணி நேரங்களுக்காகவது, துன்பங்கள், துயரங்களை மறந்து குதூகலிக்கப் பண்டிகைகள் வாய்ப்பளிக்கின்றன. ஆன்மீகச் சிந்தனைகள், பண்புகள் மனிதரில் மலர்ச்சி பெறுவதற்கு பண்டிகைகள் தளம் அமைக்கின்றன.

இந்துப் பண்டிகைகள், ஆன்மிக தத்துவ அடிப்படைகளில் எழுவன ஆன்மீக தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு, புராணங்கள் புனையப்படுகின்றன. புராணக் கதைகள், தேவர்கள் அசுரர்கள் ஆகியோருக்கிடையிலான போராட்டங்களை மையமாகக் கொண்டவை. இவை முறையே நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டங்களேயாகும். எத்துணை கஷ்டங்கள் நேரினும் இறுதியில், தீமைகள் அழியும், நன்மைகள் வெல்லும் எனும் உண்மை நிலைநாட்டப் பெறும். ஒவ்வொரு பண்டிகையும் தோற்றுவதற்குக் காரணமான அடிப்படை உண்மையும் அதனை எளிதில் விளக்குவதற்குத் தோற்றுவிக்கப்பட்ட புராண வரலாறும் நம் முன்னோரினால் நமக்குத் தரப்பட்டுள்ளன.

## தீபாவளிப் பண்டிகை - புராணக் கதைகள்

தீபாவளிப் பண்டிகை, இந்து மக்களினால் கொண்டாடப்படுகின்ற குடும்ப ஆன்மிக விழாவாகும். சமூக விழாவாகவும் கொள்ளலாம். இந்தியா முழுவதிலும் வாழுகின்ற இந்து மக்கள், ஏன் இலங்கை போன்ற கடல் கடந்த நாடுகளில் வாழுகின்ற இந்து மக்களும் சமய, சமூக, கலாசார ஒருமைப்பாட்டினை உணர்த்தும் முறையில் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

தீபாவளி என்பதற்குத் தீபங்களின் வரிசை என்று பொருள் கொள்வர். தீபங்களை ஏற்றி ஓர் ஒழுங்கு வரிசையில் வைத்து, அவற்றைச் சூழ்ந்து குடும்பத்தினர் சுற்றத்தினர், நண்பர்கள் அமர்ந்து தொல்லைகள் நீங்க சூழ்கலி அகல தெய்வ வழிபாடு செய்தலைத் தீபாவளி குறிக்கின்றது. தீபம், ஒளியைத் தருவது, இருளை நீக்குவது; அதனால் தீப ஒளி வழிபாட்டிற் குரியதாயிற்று ஒளிவர் விளக்கு செல்வத்தைத் தருதலால் விளக்கு, மகாலட்சுமி எனக் கொள்ளப்படுகிறது.

அக்கினியில் இறைவனைக் கண்ட மக்கள் விளக்கிலும் கண்டனர். திருவிளக்குப் பூசை வழிபாடு தற்காலத்தில் பிரபல்யம் பெற்றுவருதலை நாம் அறிவோம்.

"உள்ளொளி"யும் ஏற்றப்படுதல் வேண்டும். அப்போதுதான் "அளப்பிலா ஆனந்தம்" கிட்டும் "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகில் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்கிறார் பாரதியார். வாழ்வில் முழுமையான ஒளி புலர்

வதற்கு உள்ளத்திலும் வாக்கிலும் ஒளி யேற்றப்படுதல் அவசியம். தீபாவளி இதனை உணர்த்துகின்றது.

வட இந்திய மக்கள் தீபாவளி தொடர்பாகக் கூறும் கதை பின்வருமாறு அமைகின்றது.

இராமபிரான் வனவாசத்தை முடித்து, அதன்பின் இராவண சங்காரத்தையும் நிகழ்த்தி வெற்றித் திருமகனாக சீதா பிராட்டியுடன் அயோத்திக்குத் திரும்பிய திருநாளில், மக்கள் தத்தம் இல்லங்கள் தோறும் தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அதன்பின், ஆண்டுதோறும் அத்திருநாளை நினைவு கூர்ந்து தீபாவளியைக் கொண்டாடி வருகின்றனர். வட இந்திய மக்கள் இவ்வாறு தீபாவளியின் தோற்றத்தைக் குறிப்பிடுகின்றனர்.

தென்னிந்திய மக்கள் தீபாவளி தொடர்பாக நரகாசுரன் கதையைக் கூறுகின்றனர். மகாவிஷ்ணுவின் அவதாரங்களுள் வராக (பன்றி) அவதாரமும் ஒன்று. அப்போது பூமாதேவியை மணந்து பெற்ற பிள்ளை நரகாசுரன் ஆகும்.

நரகாசுரன் இறைவனை நோக்கித் தவஞ்செய்து வரங்கள் பலவற்றைப் பெற்றான். வரங்கள் அவனுக்கு வல்லமைகளை வழங்கின. வல்லமைகள் அகங்காரத்தையும் ஆணவத்தையும் வாரி இறைத்தன. நல்லவர்கள் சிறைப்படுத்தப் பட்டனர். வரங்கள் தந்த இறைவனையும் மறந்தான். செய்நன்றி மறத்தல் அசுரக் குணம். ஆலயங்களில் பூசைகள், ஆராதனைகள், விழாக்கள் நடைபெறுவதற்குத் தடைவிதித்தான். ஏன், விளக்குகள் தன்னிலும் ஏற்றப்படக்கூடாது என்று கட்டளை பிறப்பித்தான். எங்கும் இருள் மயம், மக்கள் படும் துயர்கள் சொல்லுந்தரமல்ல.

நரகாசுரன் கொடுமையின் வடிவமாக – தீமையின் ஒட்டுமொத்தமாக இருந்தான். உலகத்தவருக்குத் துன்பங்களை இழைத்து வந்தான்.

மகாவிஷ்ணு கிருஷ்ணாவதாரம் எடுத்தபோது, நரகாசுரனின் அட்டகாசம் அளவைக் கடந்துவிட்டது. மக்கள் துவாரகைக்குச் சென்று பகவானிடம் முறையிட்டனர். மக்களைப் பாதுகாக்கக் கண்ணபிரான் திருவுளங் கொண்டார்.

நரகாசுரனைப் பகற்பொழுதிலோ, இரவு வேளையிலோ கொல்ல முடியாது. அவன் பெற்ற வரம் அத்தகையது. அவன் மாயவித்தைகளிலும் சிறந்தவன். இம்மாயங்கள், மாயக் கண்ணனிடம் பலிக்குமா, என்ன? கிருஷ்ணபகவான், இரவும் பகலுமற்ற ஒரு குறிப்பிட்ட வேளையில், சத்திய பாமா தேரைச் செலுத்த, போருக்குப் புறப்பட்டுச் சென்று நரகாசுரனைச் சங்காரம் செய்தார்.

நரகாசுரன் இறக்கும் தருணத்தில், ஞானோதயம் ஏற்பட்டது. அதுவும் பகவானின் மறக்கருணையே. நரகாசுரன், தான் மக்களுக்கு இழைத்த கொடுமைகளையும், அநீதிகளையும் எண்ணி மனம் வருந்தினான். தனது தவறுகளை உணர்ந்து கொண்டான். கடைசி நேரத்தில் கண்ணபிரானை வணங்கி, பலவாறாகத் துதித்து, பகவானிடம் ஒரு வரம் கேட்டான்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

"தந்தையே, என் வாழ்நாளில் நான் செய்த குற்றங்களுக்கு இந்தத் தண்டனை சரியானதே என்பதை உணர்ந்து கொண டேன். மரணத்தை ஏற்கச் சித்தமாயுள்ளேன். இந்த நேரத்தில் எனது ஒரேயொரு வேண்டுதலைத் தந்து அருள வேண்டும்" என்று இரந்து நின்றான்.

நரகாசுரனுடைய கோரிக்கை என்ன என்று கிருஷ்ணபகவான் கேட்டார்.

"நான், தவறுகளை உணர்ந்த மர ணத்தைத் தழுவிய இந்த நாளில், உல கத்தவர் என்னை நினைவு கொள்ளும் வகையில் வரமொன்று அருள வேண்டும்" என நரகாசுரன் வேண்டினான்.

கிருஷ்ண பகவானும் நரகாசுரனை நோக்கி, "நீ இறக்கும் சதுர்த்தசி நாள். ஆண்டு தோறும் நரக சதுர்த்தசி என்று அழைக்கப்பெறும். அதனால் உன் நினைவு நிலைபெறும். இத்தினத்தில் அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்பவர்களுக்குக் கங்கையில் ஸ்நானஞ் செய்தால் கிடைக்கக்கூடிய புண்ணிய பலனை அளிக்கிறேன். இவ்வாறு எண்ணெய் ஸ்நானம் செய்தபின் புத்தாடை அணிந்து என்னை வழிபாடு செய்பவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க அருள்புரிவேன். இந்த வகையில், உன் நினைவினை ஆண்டுக் கொருதரம் மக்கள் கொண்டாடுவர்" என்று கூறி, அவன் வேண்டிய வரத்தை வழங்கினார்.

## நரகாசுரனும் திருப்தியுடன் உயிர் நீத்தான்

அதே வேளை, நரகாசுரனின் தாயாகிய பூமாதேவியும் கிருஷ்ண பகவானிடம் ஒரு வரம் வேண்டினாள். தனது மகன் இறந்த இத் தினத்தில், ஆண்டு தோறும் மக்கள் ஆயிரம் விளக்குகள் ஏற்றவேண்டும் என்பதே அந்த வரம். அதனையும் பகவான் வழங்கினார்.

நரகாசுரன் பகவானுடன் இணைந்து விட்டான். அவனின் அசுரக் குணங்களும் அரக்கப் பண்புகளும் அழிக்கப்பட்டன. தேவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மனிதர்கள் சிறை மீண்டனர். வெற்றிக் களிப்பினை விளக்குகள் ஏற்றி, பகவானை வணங்கி, இனசன பந்துக்களுடன் கொண்டாடினர். அன்று தொடங்கிய தீபாவளி இன்றும் பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

## தீபாவளியின் மகத்துவம் :

அறியாமை இருள் அகன்றநாள்; அறிவொளி பரந்தநாள்; அசுரத்தன்மைகள் விலகியநாள்; தெய்வீகம் பொங்கியெழுந்த நாள்; அகந்தை ஒழிந்த நாள்; அன்பு மலர்ந்த நாள்; அச்சம் கழிந்தநாள்; அமைதி பிறந்த நாள்; தீயனவெல்லாம் தொலைந்த நாள்; நல்லன யாவும் பொலிந்த நாள் – அந்த நாள் தான் தீபாவளித் திருநாள்.

தீபாவளித் தினத்தன்று வைகறையில் துயிலெழுந்து, நல்லெண்ணெய் தலையில் தேய்த்து சிரசு ஸ்நானம் செய்ய வேண்டும். அதன் பின் புத்தாடை அணிந்து இஷ்ட தெய்வங்களை வணங்குதல் வேண்டும். தாய், தந்தையர், குரு மற்றும் பெரியோர் களை வணங்கி அவர்களிடம் நல்லாசிகள் பெறுதல் வேண்டும். இயன்ற தான தரு மங்களைச் செய்தல் அடுத்து இடம்பெறும். பின்னர் உற்றார், உறவினர், நண்பர் களுடன் விருந்துண்டு மகிழ்வர்.

புறத்தூய்மையை நீராடிப் பெற்றுக் கொள்ளுதல் போன்று, தீபாவளித் தினத்தில் அகந்தூய்மையையும் பெற்றுக் கொள்ளுதல் இன்றியமையாதது. நல்ல எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள் என்பனவற்றை நல்லெண்ணெய் ஆகவும், அரப்பாகவும் கொண்டு அழுக்காறு, அவா, கோபம், அகந்தை, செருக்கு, மோகம், மமதை, பொறாமை, சுயநலம் ஆகிய மன அழுக்குகளைத் தேய்த்துக் கழுவி நீக்குதல் வேண்டும்.

புறத்தே ஏற்றப்படும் விளக்குகள் கரிய இருளை அகற்றுகின்றன. அஞ்ஞானம் என்னும் அக இருளையும் போக்குதல் அவசியம். அதற்கு உண்மையென்ற ஒளியை உள்ளத்தில் ஏற்றுதல் வேண்டும். எமது உள்ளங்களில் அமர்ந்து எம்மை ஆட்டிப் படைக்கும் கொடிய நரகாசுரனை நாம் வெற்றிகொள்ளும் தினம் தீபாவளித் திருநாள். நரகாசுரன் வேறு யாருமன்று; எம்மிடம் உள்ள தீய குணங்கள், கொடிய தன்மைகள் தான் என்பதையும் உணர்வோமாக.

தீபாவளியின் பொருளை அறிந்து கொண்டாடுவதன் மூலம் மனிதர்கள் ஆவோம்.


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

# கந்தர் கலிவெண்பா

திரு.ந.ரா.முருகவேள் அவர்கள்

## முன்னுரை

செந்தமிழ்ப் பெருங்கடவுளாம், திருமுருகப் பெருமானின் துதிநூல்களாகப் பெரியோர்களால் மிகவும் போற்றப்பெற்றுப் புகழ்மிக்குத் திகழும் நூல்கள் பலப்பல, அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழிக்கண் உள்ளன.அவற்றுள் கந்தர் கலிவெண்பா என்னும் நூல், முருகப் பெருமான் மீது, குமரகுருபர சுவாமிகள் நம் தமிழ்நாட்டில் தோன்றியருளிய ஞானத் தவ முனிவர்கள் பலருள் தலைசிறந்த ஒருவர். இற்றைக்குச் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர், திருமலைநாயக்கர் (கி.பி.1623 – 1658) காலத்தில், அவராற் பெரிதும் மதித்துப் போற்றி வழுத்தப்பெற்று, வாழ்ந்திருந்தவர். அவர்தம் தவநலனும், ஞானச் சிறப்பும், கவிதை மாட்சியும் அளப்பரியன. இத்தகைய குமரகுருபரர், ஐந்து வயது வரையில் பேசாமல் ஊமைபோல் இருந்து, பின்பு முருகப் பெருமான் திருவருளால் பேசும் ஆற்றலும், கல்வி நலனும், கவிபாடும் திறமையும் பெற்றார். அப்போது அவர் முதன்முதலாகப் பாடிய நூல் கந்தர் கலிவெண்பாவாகும்.

இந்நூல் முருகன் அடியார்கள் அனைவராலும் நாடோறும் பாராயணம் செய்யப் பட்டுப் பெரிதும் போற்றிவரப் பெறும் மாட்சிமை வாய்ந்தது. இதன்கண் சைவ சித்தாந்தத் தத்துவக் கருத்துக்கள் சுருக்கித் தொகுத்து விளக்கப்பெற்றுள்ளன. முருகனின் திருவுருவச் சிறப்பும், சிறந்த அருட் பண்புகளும் நன்கினிது விவரிக்கப் பட்டுள்ளன. முருகனின் வரலாறு கூறும் கந்தபுராணம் முழுவதும், இதன்கண் ஒரு குறிப்பும் விடாமல் சுருக்கித் தரப்பெற்றிருக்கின்றது. இதன் இறுதிப் பகுதியில், முருகனிடத்தில் அடியார்கள் வேண்டிப் பெறுதற்குரிய பல நலன்களும் ஒருங்கினிது தொகுத்து உணர்த்தப்பட்டுள்ளன. அளவால் சிறிதாயினும், பொருள் நலத்தாலும், கலை நலத்தாலும், கந்தர் கலிவெண்பாவானது பெரும் சிறப்புடையதாய்க் கவின் மிக்குத் திகழ்கின்றது. இந்நூலின் கருத்துச் சுருக்கத்தை, ஈண்டு இயன்றவரை ஒரு சிறிது காண்போம்.

சிவபிரானும் முருகனும், தந்தையும் மைந்தனும் போல வைத்துக் கூறப்படுவரெனினும், அவர்கள் தம்முள் வேற்றுமை உடையவர்கள் அல்லர். சங்கரனே சண்முகன், ஐம்முகச் சிவனே ஆறுமுகச் சிவன் என்பது பெரியோர்கள் கருத்தாகலின், சைவசித்தாந்த நூல்களில் சிவபிரானாகிய பதிப்பொருளுக்குக் கூறும் இயல்களும் செயல்களுமெல்லாம், ஈண்டு முருகன் மீது வைத்துக் கூறப்பெறுகின்றன.

## சைவ சித்தாந்தம் :

முருகன், பிரமதேவனும், வேதங்களும், நாத தத்துவமும், நாதாந்தமும், போதாந்தமும் காண இயலாத மெய்ஞ்ஞான வடிவினன். முதல் நடு முடிவைக் கடந்தவன் என்றும் பேரின்பமாய்ப் பேரறிவாய் விளங்குபவன். இயல்பாகவே பாசங்கள் இல்லாதவன். பெயரும் குணமும் உருவமும் அற்று, எங்கும் நிறைந்த ஒளிரும் பரமசிவமாய் நிற்பவன்.

நம்முடைய அறிவிற்கு மேம்பட்டவனாய், படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களுக்கும் அப்பாற்பட்டவனாய், மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் நான்கு கரணங்

களுக்கும் எட்டாதவனாய், தனது அருளினால், பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்னும் ஐந்து வடிவங்கள் கொண்டு எல்லா உயிர்கட்கும் பற்றுக்கோடு ஆகி, மேலான இன்பத்தைத் தருபவன் முருகனே. குறைவிலா நிறைவாய் என்றும் உள்ளவனாய், பிறத்தல், இறத்தல், நுகர்தல் என்பவைகள் இல்லாதவனாய், இவ்வுலகில் பலவகையான வியக்கத்தக்க இந்திரசாலச் செயல்களைச் செய்து, தான் மயங்காமல் பிறரை மயக்குபவன். எதன் கண்ணும் சாராது சார்ந்து, கருவின்றி நின்ற கருவாய், உருவின்றி நின்று அருளே உருவாய் விளங்குபவன் முருகன். மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களால் வரும் இச்சை, ஞானம், கிரியை என்னும் சக்திகளால், முறையே இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்று நிலைகளை உடையவனாக அவன் திகழ்கின்றான்.

தான் ஒருவனே மகேசன், உருத்திரன், திருமால், பிரமன் என்னும் உருவத் திருமேனிகள் நான்கும், சிவம், சக்தி, நாதம், விந்து என்னும் அருவத் திருமேனிகள் நான்கும், சதாசிவம் என்னும் அருவுருவத் திருமேனி ஒன்றும் ஆகிய ஒன்பதிலும், உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்ற ஒரு திருமேனியைக் கொண்டு, ஆணவ மலத்தில் அழுந்தி, உலகியல் வாழ்வில் மயங்கக் கிடக்கும் விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை உயிர்களுக்கும் முத்தியளித்தற்காக மலபரிபாகம் வரும்படி, முருகன் திருக்கடைக்கண் நோக்கம் வழங்கி அருள்கின்றான்.

இவ்வாறு ஒன்பது வகைத் திருமேனிகள் தாங்கி, விந்து, மோகினி, மான் என முறையே வழங்கப்பெறும் சுத்த மாயைத் தொடர்புற்றுப் பல கடவுளராகி, மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னும் ஆறு அத்து வாக்களையும் தனக்குரிய உறுப்புக்களாக முருகன் கொண்டுள்ளான்.

அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றம், தேவர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் ஏழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு இலட்சம் கரு வேறுபாடு என்பவற்றுள் ஒன்றில் அனுபவித்துத் தீர்ப்பதற்குரிய வினைக்கு ஏற்பப் பிறவி எடுத்துக் காற்றாடியும் சகடக்காலும் போல உழலும்படி, உயிர்களின்பால் முருகன் திரோதான சத்தியைச் செலுத்தி அருள்கின்றான்.

இன்பமே நிறைந்த சுவர்க்கம், துன்பமே நிறைந்த கொடிய நரகம் என்பவற்றில் உயிர்கள் இன்ப துன்பங்கள் நுகருமாறு செய்தருள்பவன் முருகனே. அவ்வாற்றால் உயிர்களின் வினைகள் பக்குவப்பட்டுச் சிறிது நல்ல காலம் வந்ததும், ஏணிப்படிகள் போல அமைந்துள்ள புறப்புறம், புறம், அகப்புறம் என்னும் சமயநெறிகளில் அடைந்து ஈடுபாடு கொள்ளும்படி செய்து, பலவகை விரதங்கள், பிரமச்சரியம் கிரகஸ்தம், வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கச் செய்து, உயிர்களைப் படிப்படியே சரியை, கிரியை, யோகம் என்னும் சாதனங்களிற் செலுத்தி, சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதமுத்தி இன்பங்களை, உயிர்கள் பெறுமாறு செய்து உதவுபவன் முருகனே.

பின்னர் உயிர்களுக்கு மெய்யுணர்வாகிய ஞானம் மேலோங்கச் செய்து, மந்ததர், மந்தம், தீவிரம், தீவிரவாதம் என்னும் நான்கு வகையான சத்திநிபாத நிலைகள் ஏற்படுதற்கு, இருவினையொப்பு, மலபரிபாகம் என்பன

நிகழுமாறு செய்து, அறிவுக்கு அறிவாகி, அதற்கும் எட்டாத நெறியில் விளங்கும் தனது மேலான நிலையை விடுத்து, கருணையே வடிவமாய் இவ்வுலகில் ஞானசிரியனாகப் போந்து, நம்மை ஆட்கொண்டு அருள்புரி கின்றான் முருகன்.

தன்னுடைய திருநோக்கால் உயிரி னங்களின் சஞ்சிதம் என்னும் பழவினையைத் தன் அருட்பார்வையால் தூல தேகத்தின் கருவிகள் அறுபதும், சூக்கும தேகக் கருவிகள் எட்டும், மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை துவாதசாந்தம் என்னும் ஏழு நிலங்களும் மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னும் ஆறு அத்துவாக்களும், உயிர்களின் பார்வையிலிருந்து நீங்கும்படி, அறியாமை என்னும் ஆணவமல மறைப்புத் திரையைக் கிழித்து, அறிவினால் காண்பதற்குரிய மெய்ஞ்ஞானக் கண்ணைக் காட்டியருள்பவன் முருகன்.

திருவடி ஞானமாகிய சிவஞானத்தால் பதி பசு பாசம் என்னும் மூன்றையும் செவ்விதின் அறியும்படி செய்து, எங்கும் தேங்கி நீக்கமற நிறைந்துள்ள பேரின்ப நிலையைக் காட்டி, போக்கு–வரவு, நினைப்பு–மறப்பு, பகல்–இரவு முதலிய வேறுபாடுகள் நிறைந்த விபரீத ஞானத்தை நீக்கி, உயிர்களுக்கு இறவாத இன்பம் மருவும்படி முருகன் செய்தருள்கின்றான்.

## முருகனின் திருவுருவம் :

கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூவகை அவத்தை நிலைகளையும் போக்கி, முத்தான்மாக்களுடைய கூட்டத்தில் சேர்த்து, பெரிய பரமுத்தியைத் தந்து, அகபற்று, புறப்பற்றுக்கள் அற்ற இடமே தனது திருவடியாகவும், ஞானமே உருவாகவும், இச்சை ஞானம் கிரியை என்னும் சக்திகள் திருக்கண்களாகவும், இப்பெரிய உலகமே கோயிலாகவும் நிற்கும் ஒப்பற்ற தனிச் சுடராகத் திகழ்பவன் முருகன். அவனது திருமுன்னிலை யில் எல்லா உயிர்களும் வேறுபாடின்றிச் சமமாக விளங்கும்.

நவமணிகளாலும் பசும் பொன்னாலும் செய்யப்பெற்று மின்னல் போன்று ஒளியிடு கின்ற திருமுடிகளும்; ஆறு பிறைகளை வரிசையாக வைத்தாற்போன்ற நெற்றிப் பொட்டழகும்; தாமரை மலர்போன்ற அழகிய பன்னிரண்டு விழிகளும்; பல சூரியர்கள் ஒருங்கே ஒளி வீசினாற்போல விளங்கும் மகரக் குழைகளும்; புன்முறுவல் தவழும் உதடுகளும்; பிறவி வெப்பம் தீர்க்கும் இன்சொல்லும் உடையவன் முருகப்பெருமான்.

## ஆறுமுகங்கள் :

அவனுயைட ஆறு திருமுகங்களில் சூரபதுமனைத் தடிந்து பகைவர்களின் உயிரைப் போக்கி, அழியாத பேரின் வாழ்வைத் தருவது, ஒரு திருமுகம்; உயிர்களுக்கெல்லாம் அவற்றின் பிரார்த்த கன்மத்தைப் போக்கி, அழியாத பேரின்ப வாழ்வை அளிப்பது, ஒரு திருமுகம்; வேதாகமங்கள் பலவற்றையும் ஐயமின்றி முற்றுப்பெறச் செய்வது, ஒரு திருமுகம்; உயிர்களின் மல இருளைப் போக்கிக் கோடி சூரியர்களைப் போல ஒளி வீசுவது, ஒரு திருமுகம்; நேசமுடன் போகம் நுகரும் வள்ளி தெய்வானை அம்மையர்கட்கு மேகாம் தருவது, ஒரு திருமுகம்; அருள் வேட்கையோடு திருவடியைச் சார்ந்தாரைக் காப்பது ஒரு திருமுகம். இங்ஙனம் ஆறு திருமுகங்களும் கொண்டு விளங்குபவன் முருகன்.

## பன்னிரு கைகள் :

தேன் சொட்டும் கடம்ப மலர் மாலையும், மணம் மிக்க குரவமலர் மாலையும் அணிந்த

பன்னிரண்டு தோள்களை உடையவன் முருகன். அவற்றுள் தேவர்களுக்கு அமிர்தத்தை அளிப்பது ஒன்று, தேவ மகளிரைத் தழுவி அணைப்பது ஒன்று, மழை பொழியச் செய்து உலக உயிர்களைக் காப்பது ஒன்று, பூமாலைகள் நெருங்க அணிந்திருப்பது ஒன்று, அடியவர் களை அஞ்சேல் என்று கூறி மார்பிலே வைத்தது ஒன்று, தொடையிற் சார்த்தியது ஒன்று, வீரவளையணிந்தது ஒன்று, மணி சேர்ந்தது ஒன்று, போரில் அங்குசம் பிடிப்பது ஒன்று, வாளேந்துவது ஒ்னறு, இத்தகைய பன்னிரண்டு திருக்கைகளை உடையவன் முருகன்.

## தெய்வ விளக்கு :

குடம் போன்ற தனங்களும், சிவந்த இதழ்களும், கொடி போன்ற மெல்லிய இடையும் உடைய வள்ளி தெய்வ யானை என்னும் இருவரும் விரும்பித் தழுவும் அகன்ற மார்பும், பூப்போன்ற அழகிய பட்டாடையும், பொன்னால் அமைந்த அரைஞாணும், கச்சையழகும், திருஅரையும், நாத தத்துவமாகிய வீரக்கழலும், பொற்கிண்கிணியும், பாதங்களில் அணிந்த சிலம்பும், ஒரு நூறாயிரம் உதயசூரியர்கள் ஒரே காலத்தில் ஒளி வீசுவது போன்ற பேரழகு வாய்ந்த தெய்வீக வடிவமும் ஆகியவற்றை அகக் கண்ணால் கண்டு அன்பு செய்து வழிபடுவோர்க்கு ஆருயிராய், அவர்களின் இதயக் கமலத்தில் வீற்றிருக்கும் தெய்வீக விளக்கொளியைப் போன்றவன் முருகன்.

அகரம் உகரம் மகரம் நாதம் விந்து எனப்பெறும் ஐவகை ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய், ஐந்தொழில்களை நடத்தும் பேருருவாய் நிற்பவன் முருகன், அவனுக்கு மந்திரமே இரத்தம், பதமே மாமுடி, வன்னமே தோல், புவனமே உரோமம், தத்துவமே ஏழு தாதுக்கள், கலையே உறுப்புக்கள். இங்ஙனம் ஆறு அத்துவாக்களின் வடிவாய்க் காட்சியளிப்பவன் முருகன்.

பலகோடி அண்டங்கள் உருவாகவும், சராசரங்கள் உறுப்புக்களாகவும், இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்று சக்திகள் அகக் கருவிகளாவும் கொண்டு வழிபடும் அன்பர்களுக்குச் சூக்கும ஐந்தொழில்களை ஏவி நடத்துபவன் முருகன். அவன் நிலம் நீர் தீ வளி விசும்பு ஞாயிறு திங்கள் உயிர் என்னும் அட்டமூர்த்தம் கொண்டு விளங்குகின்றான். இமயம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் எட்டுப் பகுதிகளையுடைய அட்டாங்கயோகத்தின் முடிவில், ஞானத்தை அளிக்கும் பயனாக இருப்பவன் முருகன்.

## தசாங்கங்கள் :

அன்பர்கள் உள்ளத்தில் பொங்கி எழுகின்ற ஆனந்தமாகிய மலை; பேரின்ப வெள்ளமாகிய ஆறு; இன்பம் தரும் மேலுலகமாகிய நாடு; போக்குவரவு இல்லாத உயர்ந்த அழகிய நகரம்; ஐந்தெழுத்து ஓதிச் செலுத்தும் குதிரை; மதம் தோய்ந்து களித்துத் துதிக்கையினால் ஐந்து மலங்களையும் காய்ந்த சிவஞானமாகிய யானை; அறிவும் அன்பும் கொண்டு தொடுத்த மலர்மாலை; ஐந்தொழில் நடத்தும் உயர்ந்த கொடி; நவநாதமாகிய முரசு; புவனங்களை ஆக்கி இயக்கும் ஆணை ஆகிய தசாங்கங்கள் கொண்டவன் முருகன்.

(என்று இதுகாறும் முருகனின் அருமை பெருமைகளை விளக்கும் முறையில், சைவ சித்தாந்தக் கருத்துக்கள் கந்தர் கலிவெண்பாவில் சந்தமுற நன்கினிது சுருங்கக் கூறி விளக்கப்பெற்றன. (கண்ணிகள் 1 முதல் 74 வரை). இனி, கண்ணிகள் 75 முதல் 108 வரையில் கந்தபுராண வரலாறுகள் கவின்மிகச் சுருக்கித் தொகுத்துக் கூறப்படுகின்றன.



பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

**கந்தபுராணச் சுருக்கம் :**

கயிலாய மலையில் உமாதேவியுடன் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். ஒருநாள், அசுரர்களின் கொடுமையைத் தாங்காத தேவர்கள், சிவபிரானிடம் சென்று தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்கின்றனர். சிவபிரான் அவர்களின் முறையீட்டைக் கேட்டுத் திருவுள்ளம் இரங்குகின்றான். தனக்கு இயல்பாக உரிய ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐந்து முகங்களுடன், கீழ்நோக்கிய அதோமுகம் என்னும் முகத்தையும் கொண்டு ஆறுமுகங்கள் உடையவனாய், ஆறு நெற்றிக் கண்களின்றும் ஆறு தீப்பொறிகளை வெளியே விடுத்தான். அவைகள் எல்லா உலகங்களிலும் பரவித் தேவர்களுக்கு அச்சத்தை விளைவித்தன. அதனால் சிவபிரான் அவற்றைத் திருக்கையால் எடுத்து வாயு தேவனிடம் தந்தான். அவன் அதனைத் தாங்கலாற்றாமல் அக்கினி பகவானிடம் அளித்தான். அவனும் அதைத் தாங்கமுடியாமல் குளிர்ந்த கங்கை யாற்றில் விட்டான். கங்கையும் தாங்கமுடியாமல், தனது மடியில் தாங்கிக்கரையிலுள்ள சரவணப் பொய்கையிற் சேர்த்தாள். அங்கு அப்பொறிகள் ஆறும் ஆறு குழந்தைகளாயின. கார்த்திகைப் பெண்கள் ஆகிய அறுவரின் முலைப்பால் குடித்துவிளையாடின. சிவபிரான் அக்குழந்தை களை உமாதேவியாருக்குக் காட்டினான். தேவியார் அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்து அணைத்தாள். அதனால் அவைகள் ஓருருவம் ஆயின. அது கண்டு மகிழ்ந்து கந்தன் எனப் பெயரிட்டு, முகத்தில் அணைத்து உச்சிமோந்து திரு முலைப்பால் ஊட்டி, உமாதேவியார் சிவபிரான் இடத்தில் அக்குழந்தையை அளித்தாள்.

உமாதேவியாரின் சிலம்பிலிருந்து சிதறிய நவமணிகளினின்று, மாணிக்கவல்லி, முத்துவல்லி, புஷ்பராகவல்லி, கோமேதகவல்லி, வைடூரியவல்லி, வைரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, இந்திரநீலவள்ளி என்னும் நவசக்திகள் தோன்றினர். அவர்கள், சிவ பிரானை விருப்புடன் நோக்கிக் கருக் கொண்டனர். அதனால் அவர்களிடமிருந்து வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்தரர், வீரராட்சசர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்னும் நவ வீரர்கள் தோன்றினர். அவர்களுள் ஒருவராகிய வீரவாகுவை அழைத்து, நாரதமுனிவர் செய்த வேள்வியில் தோன்றி, உலகத்தையழித்து உலவிவரும் ஆட்டுக் கிடாயைக் கொண்டு வருக என்று முருகன் கட்டளையிட்டார். அங்ஙனமே வீரவாகு அதனைப் பிடித்துக் கொணர்ந்து விடுக்க, அதனை முருகன் எட்டுத் திக்குகளிலும் செலுத்தி விளையாடினான்.

ஒருகால் பிரமன் கயிலைக்குச் சென்ற போது அகந்தையால் முருகனை வணங்காது சென்றான். முருகன் அவனை அதட்டி அழைத்து நீ யார்? நீ செய்யும் தொழில் யாது?' என வின வினான். அதற்கு அவன் 'நான் பிரமதேவன், நான்செய்வது படைப்புத் தொழில்' என்றான். 'படைப்புத் தொழிலை நீ எவ்வாறு செய்கின்ற னனை' என முருகன் வினவ, "வேதங்களை ஓதிச் செய்கிறேன்' என்றான் பிரமன். 'வேதங் களை ஓதிக் காட்டு' என முருகன் பணித்தான். பிரமன் வேதத்தை ஓதத் தலைப்பட்டு, முதலில் 'ஓம்' என்று கூறித் தொடங்கினான். முருகன் உடனே அவனை நிறுத்தி, 'நீ இப்போது ஓதிய ஓம் என்பதன் பொருளைக் கூறுக' எனப் பணித்தான். அவன் தெரியாது விழித்தான். 'இது தானும் அறியாத நினக்கு இத்துணைச் செருக்கா? நீ படைப்புத் தொழிலைச் செய்யுந் தன்மை யாங்ஙனம்?' எனக் கடிந்துரைத்து, அவனைத் தலையிற் குட்டிச் சிறையில் இடுவித்தான்.

பிரமன் சிறைபட்டதனால் வருந்திய திருமால், சிவபிரானிடம் சென்று முறையிட்டார்.

சிவபிரான் நந்திதேவரை முருகன்பால் உய்த்து, பிரமனைச்சிறையினின்று விடுவிக்கப்பணித்தார். முருகன் அதற்கு இசைந்திலன். சிவபிரான் நேரே போந்து முருகனைக் கண்டார். முருகன் சிவபிரானைப் பணிந்து, பிரமன் பிரணவப் பொருள் அறியாமையினால் சிறைப்பட்டதனைக் கூறினார். சிவபிரான், 'அற்றேல், பிரணவத்தின் பொருளை நீ எனக்குக் கூறவல்லியோ'? என்றார். 'முறைப்படி இருந்து கேட்பின் உரைப்பேன்' என்று முருகன் பொழிந்தருளி னான். சிவபிரானும் அதற்கு இசைய, முருகப் பெருமான் சிவனார் மனங்குளிர, உபதேச மந்திரம் இருசெவி மீதிலும் பகர்தல் செய்தான்.

தேவர்களின் துன்பத்தை தீர்ப்பதற்காக முருகன் தாரகாசூரனை அழித்தான். அவ னுக்குத் துணையாகப் போந்து மலையாக நின்ற கிரவுஞ்சன் என்னும் அசுரனையும், வீரவடிவேல் விடுத்து ஒழித்தான். கடல் அலை வீசும் திருச்செந்தூரில், கருணை வெள்ளம் போல உயர்ந்த பீடத்தில் வீற்றிருந்து, தேவேந்திரனுக்குத் தஞ்சமளித்தான். சூர பதுமனிடம் நல்லுரைகள் கூறிவரும்படி வீரவாகுவைத் தூதுவிடுத்தனர். ஆனாலும் சூரபதுமன் தேவர்களைச் சிறைவிட மறுத்தமை யால் தேர் யானை புரவி காலாள் என்னும் நான்கு வகையான படைகளையும் கொண்டு சென்று, பானுகோபன், சிங்கமுகன் முதலிய அசுரர்களை வைத்து, வெற்றிமாலை அணிந் தான். அதுகண்டு ஒளிந்த சூரனை இரண்டு கூறுகளாகப் பிளந்தான். அவற்றில் ஒன்று மயிலாகவும், மற்றொன்று கோழியாகவும் வடிவெடுத்து நின்றது. முருகன் மயிலை வாகனமாகவும், கோழியைக் கொடியாகவும் ஏற்றுக்கொண்டார்.

இவ்வாறு சூரபதுமனைத் தடிந்தனால், முருகன் மும்மூர்த்திகளின் குறைகளைப் போக்கினான். தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தான். முருகன் அருளால் தேவர்கள் மகிழ்ந்தார்கள். தேவேந்திரன் தனக்கும் தேவர்களுக்கும் நலம் செய்த முருகனுக்குத் தன் நன்றியைப் புலப்படுத்த விரும்பினான். அதனால் தன் மகளாகிய தெய்வயானை யம்மையை முருகனுக்கு மணம் செய்துதர விரும்பினான். தன் மகளை மணந்து ஏற்றுக்கொண்டருளுமாறு முருகனைப் பணிந்து வேண்டிக் கொண்டான். அவனது வேண்டுகோளுக்கிசைந்து, தெய்வயானை யம்மையை முருகன் திருப்பரங்குன்றத்தில் மணம் புரிந்து கொண்டு மகிழ்வித்தான்.

திருமாலின் புதல்வியராகிய அமுதவல்லி, சுந்தரவல்லி ஆகிய இருவரும், முருகனை மணக்க விரும்பித் தவம் புரிந்தனர். முருகன் பணித்தபடி அமுதவல்லி விண்ணுலகத்தில் தெய்வயானையாகத் தோன்றி முருகனை மணந்தனள். மற்றொருத்தியாகிய சுந்தரவல்லி மண்ணுலகத்தில் சிவமுனிவர் என்பவரின் அருட்பார்வையால் மானொன்றின் வயிற்றில் கருவுற்று, வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியில் தோன்றி, வள்ளி எனப் பெயரிடப்பெற்று, நம்பிராசன் என்னும் வேடர் தலைவனால் எடுத்து வளர்க்கப்பட்டு வந்தாள். தமிழ் நூல்கள் கூறும் கற்பு களவு என்னும் இருவகைத் திருமண முறைகளுள், கற்பு மணத்திற்குரிய எடுத்துக் காட்டாகத் தெய்வயானை அம்மையை மணந்த முருகன், களவு மணத்திற்கு இலக்கியமாகப் பலவகைத் திருவிளையாடல்களை நிகழ்த்தி வள்ளி யம்மையை மணந்து கொண்டான்.

இவையனைத்தும் கந்தபுராணம் கூறும் முருகனின் விரிவான வரலாற்றின் சுருக்கம். சுருங்கிய சில வரிகளில் கந்தபுராண வரலாறு முழுதினையும் முறைப்படத் தொகுத்து, ஒருங்கே தொடுத்து இனிது பாடியருளிய குமரகுருபரரின் கவிதைக் கலை நலமும்,



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பக்தியுணர்வின் சிறப்பும் பெரிதும் மிகப் பாராட்டுதற்குரியனவாகும்.

## வேண்டுகோள்

திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் குன்றுதோறாடல் பழமுதிர்ச்சோலை என்னும் ஆறுபடை வீட்டுத் தலங்களையும் தரிசித்து, ஆறு எழுத்து மந்திரத்தைச் செபித்து, வழிபடும் அன்பர்களின் உள்ளத்தில் எழுந்தருளிக் குடிகொள்ளும் முருகனே! திருச்சீரலைவாய் ஆகிய திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்து, எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் பாதுகாத்து அருள்புரியும் செவ்வேளே!

எண்ணில்லாத தொன்னெடுங்காலமாக அடைந்து வருகின்ற பிறவித் துன்பமும், காலமின்றி எதிர்பாராமல் நேரும் இறப்புத் துன்பமும், பலகோடி இடையூறுகளும், பலவகையான நோய்களும், பலவகையான பாவங்களும், பில்லி சூனியம் போன்ற ஏவல் வினைகளும், பாம்பு பிசாசு கொடிய பூதம், பெரியதீ, நீர் வெள்ளம், தீங்கு விளைவிக்கப் பகைவர்கள் விடும் படைக்கலங்கள், தீமை விளைவிக்கும் கொடிய நஞ்சு, கொடிய விலங்குகள் முதலியன எவையாயினும், எப்போது வந்து எம்மை எதிர்த்தாலும், அவ்விடத்தில் அப்போதே நின்னுடைய பஞ்சை மயில் வாகனமும், பன்னிரண்டு திண்தோள் களும், அச்சம் அகற்றும் அயில்வேலும், கச்சைகட்டிய திருஅரையில், சிறிய மெல்லிய திருவடியும், அஞ்சேல் என்னும் திருக்கையும், அருள்பொழியும் பன்னிரண்டு திருவிழிகளும், ஒளிவீசுகின்ற அழகிய ஆறு திருமுடிகளும், எல்லாத் திசைகளிலும் எதிரே தோன்ற வெளிப்பட்டு, இடுக்கண்களையெல்லாம் பொடியாகச் செய்து, எல்லா வரங்களையும் தந்து, நீ எங்கள் உள்ளத்தில் புகுந்து உல்லாசமாகக் குடியிருத்தல் வேண்டும்.

எங்களுக்கு ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடும் திறமையையும், அட்டாவதானம் என்னும் அருஞ்செயல் புரியும் ஆற்றலையும், இயல் இசை நாடகம் என்னும் மூன்று கூறாக அமைந்த பற்பல காவியங்களின் பயிற்சியையும், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்து இலக்கணத்திலும் தேர்ச்சி நிரம்பிப் பழுத்த தமிழ்ப் புலமையையும் சிறப்புறக் கொடுத்தருள்க. இப்பிறவியிலுள்ள அகப் பற்று புறப்பற்றுக்களாகிய இரண்டு வேதனைகளையும் அகற்றி ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்களையும் நீக்கி, பசுபோதம் நீங்கி, ஒழுக்கம் வாய்ந்து, திருவருளின் சிறப்பை ஆராய்ந்து இன்புறுவதையே பொழுதுபோக்காகக் கொண்டுள்ள, சிறந்த பழைய அடியார்களுடன் கூடும்படி செய்! பேரின்பத்தை நிறைய நுகரச் செய்து, மணம் பொருந்திய சிவந்த தாமரை மலர் போன்ற நின் திருவடிகளைக் காட்டி ஆட்கொண்டு, அடியோங்களுக்கு முன்னின்று அருள்புரிவாயாக!

## முடிவுரை :

இங்ஙனம் பற்பல நலன்களும், அற்புதக் கவிதைச் சிறப்பும் அமைந்து, பக்தியுணர்வை வளர்ப்பதற்குரிய பாராயணப் பனுவலாக விளங்கும் கந்தர் கலிவெண்பா என்னும் கவின்மிகு நூலை, நாம் அனைவரும் நாடோறும் ஓதி, முருகன் திருவருள் பெற்று உய்ய முயலுவோமாக!

# மலக்கட்டு / மலச்சிக்கல் (Constipation)

**Dr. S. டிசிஜயந்தி அவர்கள்**
*துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலை*

இதனை ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாகக் கருதுவார்கள். சிலர் இறுக்க மாக மலம் கழிவதையும், மலம் கழிவதில் கடினம், மலம் கழிந்த பின்னர் முழுமை பெறாத உணர்வு என பல வகையில் கூறுவார்கள்.

மருத்துவ ரீதியில் மலக்கட்டு எனும் போது கிழமைக்கு 3 தடவையிலும் குறை வாக மலம் கழிவது எனப் பொருள்படும். தீவிர மலக்கட்டு எனப்படும் போது கிழமைக்கு ஒரு தடவை மலம் கழிதல் எனப் பொருள்படும். எனவே இதனைக் கண்டறிவதற்கு நோயாளியிடம் விபர மாக கேட்டறிவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**மலச்சிக்கல் ஏற்படுவதற்கான காரணங்கள்**

1. பழக்கவழக்கம்
2. உணவுமுறை
3. மலம் இளக்கிகளுக்கு பழக்கப்படல் (Lzxatives)
4. ஓமோன் பாதிப்பு
   அ) தைரொயிட் ஓமோசன் பாதிப்பு (Thyroid hormone)
   ஆ) மாதவிடாய் காலம், கர்ப்ப காலம்
5. உணவுக் கால்வாயில் நோய்நிலை
6. மத்திய நரம்புத்தொகுதி (Central Nervous system) பாதிப்புகள்
   பாக்கின்சன்ஸ் (Parkeinsons disease) multiple scterois போன்றன.
7. இதனைவிட வயோதிப நிலை

இதனை பின்வருமாறு நிவர்த்திக்க முடியும்.

1) மலம் கழித்தல் என்பது பழக்க வழக்கங்களில் ஒன்று. அதாவது காலை எழுந்தவுடன் மலம் கழித்தல் வேண்டும். இதனை தினமும் காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு பழக்கமாக கடைப்பிடிக்க வேண்டும். இதனை சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டும். மலம் கழிக்க சிறிது நேரம் முன்னராக இளம் சூடான நீர் ஒரு குவளை குடிப்பது சிறந்தது. அதை விடுத்து மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு வரும்போது அதனை அலட் சியம் செய்யாது மலம் கழிக்க வேண்டும்.
2) சுத்தமான நீர் ஏறக்குறைய மூன்று லீட்டர் ஒரு நாளைக்கு குடித்தல்.
3) உணவில் நார்த்தன்மையான உணவு களை அதிகம் சேர்த்தல்.
   அ) பனம் பொருட்கள் - பனாட்டு, புழுக்கொடியல், ஒடியல், பனங்கட்டி (சீனிக்குப் பதிாக)
   ஆ) இலைக்கறி வகைகள் - முளைக் கீரை, அகத்தி, முருங்கை, முசுட்டை, தவசி, சண்டி, வண்டு சொலி, கொவ்வை, முல்லை, பொன்னாங் காணி, வாதமடக்கி, பசளி, கங்குன், சிறுகீரை, பீற்றூட் இலை, வட்டதுத்தி போன்றன.

4) உணவில் காரத்தன்மையை (உறைப்பை) அதிகம் பாவித்தல் கூடாது.
5) கோழி இறைச்சியை தவிர்த்தல் சிறந்தது.
6) பழவகைகளை தினமும் உண்ணுதல் வேண்டும். வாழைப்பழம், (கப்பல் வாழைப்பழம் தவிர்க்கவும்), பப்பாசி, விளாம்பழம், மாம்பழம், பலாப்பழம், வெள்ளரி, வில்வம்பழம் போன்னவற்றை அவ்வவ் பருவ காலங்களிற்கு அமைய உண்ணுவதற்காகவே இயற்கை அமைத்துத் தந்துள்ளது.
7) குளிர் நீரில் தினமும் குளித்தல்.
8) உடற்பயிற்சி, யோகாசனம் செய்தல்.
9) அதிக நேரம் கதிரையில் (பலகை, பிளாஸ்ரிக், குஷன்) இருப்பதைத் தவிர்த்து பின்னல் கதிரையில் இருப்பது சிறந்தது.
10) மலமிழக்கிகளைத் தொடர்ச்சியாகப் பாவித்து அதற்கு அடிமையாவ தனைத் தவிர்த்தல்.
11) சிறியவர்களிற்கு மலச்சிக்கல் ஏற்படும் போது கொத்தாறிய நீர், தோடம்பழம் / தேசிப்புளி என்பவற்றின் சாறு, இளநீர் போன்றன கொடுத்தல், பப்பாசிப்பழம், வாழைப்பழம் கொடுத்தல். இதனைவிட வயிற்றில் வட்டமாக, மெதுவாக தேய்த்து விடல் போன்றவற்றால் சிறுவர்களின் மலச்சிக்கலைத் தீர்க்கமுடியும்.

**இவற்றிற்கு மேலதிகமாக**

12) வெள்ளைப்பூடு, புளி சேர்த்து நீரில் அவித்து (10ml - 15ml) குடித்தல்.
13) அருநெல்லி விதையை உலர்த்தி பொடி செய்து (ஒரு மேசைக்கரண்டி) சர்க்கரையுடன் / பனங்கட்டியுடன் உண்ணல்.
14) கடுக்காய்த்தோல் பொடி செய்து (ஒரு மேசைக்கரண்டி) அதனை வெந்நீரில் அதிகாலையில் குடித்தல்.
15) வட்டத்துத்தி இலை, ஊறவிட்ட பயறு, வெங்காயம் இவற்றை சமஅளவு சேர்த்துச் சாப்பிடல்.

போன்றவற்றைச் செய்வதனால் மலத்தினை ஒழுங்கான முறையில் கழிக்க முடியும். இவற்றிற்கு மேலதிகமாக மலச் சிக்கல் ஏற்படுமிடத்து வைத்தியசாலை அணுகி வைத்திய ஆலோசனைப்படி நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் மேற் குறிப்பிட்டவாறு சில உடலியல் பாதிப்புகள், நோய்நிலைகளில் ஏற்படுமிடுத்து அதனை உரிய பரிசோதனைகளின் மூலம் கண்டறி யப்பட்டு அவற்றினை நிவர்த்திக்குமிடத்தே மலச்சிக்கலைத் தீர்வுக்குக் கொண்டுவர முடியும்.

எனவே மலச்சிக்கல் உள்ளவர்கள் அதனை மறைக்கவோ, கூறுவதற்கோ வெட்கப்பட்டோ அலட்சியம் செய்யாது மேற்கூறியவற்றை நடைமுறைப்படுத்து வதுடன் வைத்திய ஆலோசனையைப் பெறவும், மலச்சிக்கலினால் தோல் நோய்கள், வயிற்று நோய்கள், மூட்டு நோய்கள் போன்றன உருவாக வாய்ப்புகள் அதிகம் காணப்படுகிறது.

# ஆடுகின்றான் அழகைப் பாரடி

ஸர்வ ஜனோபகாரி

டாக்டர் வி.வி.ஸ்வர்ணவேங்கடேச தீட்சிதர்

ராகம் : அடாணா தாளம் : ஆதி

## பல்லவி

ஆடுகின்றான் அழகைப் பாரடி (பாங்கீ)
(அம்பலவாணன் ஆனந்த நடனம்)
அவனுக்கிணை உலகில் யாரடி தில்லையில் (ஆடு)
(தந்தோம், தகதோம் என ஆடுகின்றான்)
(அருள் தந்தோம், தந்தோம் என ஆடுகின்றான்)

## அனுபல்லவி

தேடிய மாலுக்கும் (திணிநிலம் பிளந்து சென்று)
தெரியாத பாதம் தூக்கி
வாடியும் ப்ரம்மன் காணா (வானிற் பறந்து சென்று)
வளர் முடியில் கங்கை தேக்கி (ஆடு)

## சரணம்

செந்தமிழ் உலகெலாம் செழித்திடத் தானே
வந்தவர்க்(கு) இன்பமே தந்திடத் தானே
ஸுந்தரர் தேவார துதி கேட்டுத் தானே
ஸுந்தரி சிவகாமி சொக்கிடத் தானே

## மத்யம காலம்

சந்திரன் ஜடையில் பளபளக்கவே
செந்தழல் கையில் ஒளி ஜ்வலிக்கவே
மந்திர ஒலியது எங்கும் ஒலிக்கவே
இந்திராதியரும் கண்டு களிக்கவே (ஆடு)



பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

# ஆணவம் அடங்கியநாள் - அநியாய ஆட்சி ஒடுங்கியநாள்!

கவிஞர் வி. கந்தவனம் அவர்கள்
(கனடா)

இருளை அகற்றிடுவோம் – அஞ்ஞான
இருளை அகற்றிடுவோம்
ஒருமுக மாகத் திருவருள் உறவை
உள்ளத்தில் வளர்த்திடுவோம் – மெய்ஞ்ஞான
ஒளியில் திளைத்திடுவோம்!

அஞ்ஞானம் உள்ள இடம் – ஆணவம்
அதிகாரம் செலுத்துமிடம்
எஞ்ஞான்றும் பொய்யும் களவும் சூதும்
எங்கெங்கும் ஓங்கும் இடம் – நீதி
இருட்டில் தூங்குமிடம்!

ஆணவம் அடங்கியநாள் – அநியாய
ஆட்சி ஒடுங்கியநாள்
நாணமில் நரகா சுரனைத் திருமால்
நலிவுறுச் செய்த நன்னாள் – நன்மை
நற்கதி பெற்ற பொன்னாள்!

தீபங்கள் ஏற்றிடுவோம் – தொற்றிய
தீவினை தீர்த்திடுவோம்
கோபுரக் கோயிலிற் குடிகொண்ட துர்க்கையின்
குங்குமம் தரித்திடுவோம் – பற்றிய
குறைகளை எரித்திடுவோம்!

இந்தநல் நாளினிலே – தமிழர்
இன்புற வாழ்ந்திடவே
சந்ததம் அறிவொளி பரப்பிய சிவத்தமிழ்
தாயையும் நினைந்திடுவோம் – நினைந்தவர்
தாள்களை வணங்கிடுவோம்!

ஏக்கம் கலைந்திடவும் – தொடரும்
இடர்கள் அகன்றிடவும்
காக்கும் கடவுளின் கருணையை வேண்டி
வாழ்க்கை வளம்பெறவும் – தீப
வரிசைகள் ஏற்றிடுவோம்!

# முருக ஜபம்

அன்பு முருகா! அருண கிரிக்குதவும்
இன்ப முருகா! இளமுருகா – துன்பம்
துடைக்கும் இனிய துரையேயென் அன்பின்
அடைக்கலத்தை நீயேற் றருள்.

பழனி பழனி என்றதுமே
பழைய வினைகள் பறந்தோடும்
பழனிவேலன் பதம் பிடித்தால்
பாழுங் கவலைத் துயர்மாறும்
பழனியப்பன் புகழ் பாடின்,
பந்த பாசப் பகைவிலகும்
பழனி முருகன் அருகிருந்தால் –
பரமானந்தம் பெற லாமே.

அடியார் கூடி யன்பாலே
அருளா ரின்பம் பெறுமருந்து
குடந் ராட்டிக் கொண்டாடிக்
குமரா அமரா என்றாடி
மடமை நீங்கிச் சிவஞான
வரமே புல்கும் மலைமருந்து
சட வாழ்வினிலே சிற்சக்தித்
தணலை மூட்டும் தவமருந்து

மருளார் பிறவித் துயர்மாற
மருந்தொன் றுண்டு மாநிலத்தில்
இருளார் வினைகள் இயலாமே
இதயத் தெளிவு தருமருந்து
பொருளார் பரமன் அருட்கனலிற்
பூத்த மருந்து பழநிமலை
முருகா குமரா எனும் மருந்து
முத்திக் கேற்ற முழுமருந்து.

அன்பே யான சிவபெருமான்
அருளார் நெற்றிக் கனலானான்
துன்பே யின்றித் துயரின்றித்
தொண்டர் துணையாய் வருமப்பன்
புன்பே யச்சப் பொய்யிருளைப்
போக்கும் புலவன் பொற்கோயில்
தென்பேர் பழநிச் செவ்வேளின்
திருக்கோயில் ஓம் குகக்கோயில்!

கவியோகி மகரிஷி
சுத்தானந்த பாரதியார்

# கனவு காணட்டும் கவிஞன்

திரு. த. ஜெயசீலன் அவர்கள்
(பிரதேச செயலர், பருத்தித்துறை)

கவிஞன் என்பவன் கனவுடன் வாழ்பவன்.
கவிஞன் என்பவன் கனவினால் வாழ்பவன்.
கவிஞன் என்பவன் கனவிலும் வாழ்பவன்.
கவிஞன் என்பவன் கனவென வாழ்பவன்.
கவிஞன் என்பவன் கனவில் மிதப்பதாய்....
கரையும் யதார்த்த நனவில்.... ஓர் கைதிபோல்
கவியும் துன்பச் சிலுவை சுமந்து.... தன்
கடமை செய்யாது தோற்றுத் துவளுவான்!

வையகம் வாழ வேண்டுமென் றேங்குவான்.
வையம் பாலிக்க வரங்கேட்டுப் பாடுவான்
வையகம் உய்ய வழிகளைத் தேடுவான்
வையகம் வெல்லும் வேளை கூத்தாடுவான்
வையம் இவனைக் கணக்கில் எடுக்காது!
வையம் இவனின் குடும்பத்தைக் காக்காது!
வையம் இவனின் கனவுச் சிறைவிட்டு
மனைவி மக்களை மீட்டும் எடுக்காது!

கவிஞன் காணும் கனவுகள் தாம்.... இந்த
ககன உண்மையைக் கண்டு பிடிப்பவை!
கவிஞன் காணும் கனவு.... இயற்கை
இறுக்கிக் கட்டிய புதிர்கள் அவிழ்ப்பவை!
கவிஞன் காணும் கனவுகள் தான்... எந்தக்
காலத்திற்கும் ஏற்ற நனவைச் சமைப்பவை!
கனவு காணட்டும் கவிஞன்; அவனுக்குக்
கருண காட்டலே.... வெல்லும் வழிவகை!

தமிழ்க் கடல்

மோன மாகப் பரந்து விரிந்தெந்தன்
முன் கிடக்குது தமிழாம் சமுத்திரம்
பார்வைப் புலத்துக்கு எளிமையாய்த் தோன்றினும்
பரப்பும் பிரமாண்டம்; ஆழமோ அதிசயம்.
யார் முழுமையாய் அளந்து அறிந்தவர்?
யார் அதற்குள் முழுதாய் இருப்பதைத்
தேர்ந்தவர்? உயிர்.... உயிரற்ற பல்வகைத்
திறம் உணர்ந்தார்க்குச் சொல்லி முடித்தவர்?

ஆழம் காண முடியலை எங்களால்,
அகலம் தேற இயலலை திங்களால்,
யாவை முத்துக்கள், உயிர்வகை, தேவையும்
ஆற்றவை எவை? காணலை எங்கள்... ஆள்!
கோடை மாரி என்று இளைத்துக் கொழுக்காமல்
குடியிருக்கும் நம் கரையைக் கரைக்காமல்,
நாளும் அமுதம் விளைந்திடும் பாற்கடல்
நந்தமிழ்... இது வற்றாத மாகடல்!

இந்த ஆழியில் மழையின் துளிஒன்றாய்
இவனும் வீழ்ந்து கலந்துளேன்; என்னாலே
இந்தச் சமுத்திர மட்டம் சிறிதேனும்
உயரமாட்டாது என்ப தறிகுவேன்!
இந்தத் துளியினால் சமுத்திரத் தன்மையில்
ஏதும் மாற்றம் நிகழுமோ தேறிடேன்!
என்னைப் போன்ற துளிகளால் ஆனதே
இது; ஆம்.... இப் புகழ்போதும்... வாழுவேன்!

# அருள் ஒளி
# தகவல் களஞ்சியம்

**நல்லூர்க் கந்தன் வடக்கு வீதியில் புதிய கோபுரம்**

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் புதிய இராஜகோபுரத் திருப்பணி வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு தெற்கு வீதியில் ஆறுமுகசுவாமி வாயிற் கோபுரம் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதே அளவுப் பிரமாணத்தில் அழகிய கோபுரம் வடதிசையிலும் உள்ளூர் கலைஞர்களைப் பயன்படுத்தி கட்டப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

**சைவவித்தகர் முதலாவது அணியின் பட்டமளிப்பு விழா**

ஒரு வருட காலமாக வதிவிடப் பயிற்சி மூலம் அகில இலங்கை இந்து மாமன்றம் நல்லூரில் நடாத்திய சைவவித்தகர் பட்டப்படிப்பு முதலாவது அணியின் பயிற்சி நிறைவுற்று பட்டமளிப்பு விழா நடைபெற்றது. நல்லை ஆதீன முதல்வர் பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந் கொண்டு சிறப்பித்தார். ஆறு மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

**மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் இராஜகோபுர கும்பாபிஷேகம்**

சரித்திரத்தில் பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் புதிய இராஜகோபுரம் மணிக்கூட்டுக் கோபுர கும்பாபிஷேகம் 29-10-2012 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இலண்டனிலிருந்து ஆயிரம் கிலோ எடையுடைய புதிய மணியை உரும்பிராயைச் சேர்ந்த திரு. தர்மகுலசிங்கம் குடும்பம் அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

**செம்மணி இந்து மயானத்துக்கு நவீன மின்சார எரிப்பு மண்டபம்**

நல்லூர் செம்மணி இந்து மயானத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் நவீன மின்சார எரிப்பு இயந்திரம் அமைப்பதற்கும் அதற்கான மண்டப அமைப்பு வேலை அங்குரார்ப்பணமும் 18.10.2012இல் அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**வாகனங்கள் திருட்டு**

ஆனைக்கோட்டை புளியங்கிணற்றடி பிள்ளையார் ஆலயத்தில் இருந்த குதிரை வாகனம், இடப வாகனம் திருடர்களால் திருடப்பட்டுள்ளதாக நிர்வாகம் முறையிட்டுள்ளது.

**சைவப் புலவர் பட்டமளிப்பு விழா**

சைவப்புலவர் சங்கம் நடாத்திய சைவப்புலவர் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா சமீபத்தில் சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் திரு.மு. திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் மட்டக்களப்பில் நடைபெற்றது.

**குப்பிளான் மக்கள் கச்சேரியில் எதிர்ப்பு ஊர்வலம்**

சைவப் பாரம்பரியம் மிக்க குப்பிழான் கிராமத்தில் பிற சமய ஆலயம் நிறுவும் முயற்சியைத் தடுக்கக் கோரி ஆண்கள்

பெண்கள் பலர் திரண்டு யாழ் மாவட்ட செயலகத்தில் எதிர்ப்பு ஊர்வலம் நடாத்தினர். பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

**தாவடியில் இராமகிருஷ்ண விவேகானந்தர் தியான நிலையம்**

தாவடிக் கிராமத்தில் பல லட்சம் ரூபா செலவில் மேற்படி நிலையம் விஜயதசமி நன்நாளில் திறந்து வைக்கப்பட்டது. பேராசிரியர் க. தேவராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாவில் பலர் உரையாற்றினர். தியான மண்டபம், அலுவலகம், சிறுவர் வகுப்புகளுக்கான கல்வி மண்டபம் எனப் பல நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**யாழ் போதனா வைத்தியசாலை வளாக ஞானவைரவர் திருப்பணி**

யாழ் போதனா வைத்தியசாலையிலுள்ள ஸ்ரீ சாமுண்டீஸ்வரர் சமேத ஞானவைரவர் கோவில் புனரமைப்பு வேலை நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்துக்கு அருகிலுள்ள பழைய கட்டடங்கள் நீக்கப்பட்டு புதிய வைத்தியசாலைக் கட்டடங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வயிரவர் கோவில் புதிய அமைப்பில் தற்போது கட்டப்பட்டு வருகிறது. இத்திருப்பணியை நிறை வேற்றுவதற்கு ஐந்து மில்லியன் பணம் தேவைப்படுவதாக பரிபாலன சபையினர் அறிவித்துள்ளார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்
திரு.கி.சுரேஸ்குமார் (கணக்காளர்)
0772444030
Dr. ச. சிறிபவானந்தராஜா
(பணிப்பாளர்)

**கொழும்பு றோயல் கல்லூரியில் நாவலர் சிலை**

நாவலர் சபையின் ஏற்பாட்டில் சங்க உறுப்பினர் திரு.ந. கருணையானந்தன் (கணக்காய்வாளர்) அவர்களின் பேராதரவில் நல்லை நகர் நாவலர் பெருமானின் உருவச்சிலை றோயல் கல்லூரியில் நிறுவப்பட்டு வழிபாடு நடைபெற்றது.


**21 வருடங்களுக்குப்பின் வடமராட்சி கிழக்கு மண்டலாய் பிள்ளையார் ஆலயத்தில் பூசை**

கடந்தகாலப் போர் காரணமாக 1991 முதல் மக்கள் இடம்பெயர்ந்து பூசை வழிபாடு இல்லாதிருந்த இக்கோவிலில் மீண்டும் பூசை வழிபாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# பிரார்த்திப்போம்

## உயர்திரு.செ. முத்துக்குமாரசாமி


( சிவதொண்டன் நிலையக் காவலர்,
கைதடி மார்க்கண்டு சுவாமிகள்
அனுக்கத் தொண்டர், முன்னாள் யாழ்
இந்துக் கல்லூரி பிரதி அதிபர்)



பண்புடையார் பண்டுண்டுலகென்ற
சொல்லுக்கு இலக்கணமாகி
அமைதித் தொண்டால்
ஆன்மீகம் விளக்கிய ஞாயிறு
மருத்துவப் படிப்பை உதறி
மாசற்ற ஆசிரியப் பணி செய்தோன்
தவஞானி யோகர் மார்க்கண்டர்
தத்துப் பிள்ளை பேறு பெற்றாய்
உள்ளும் புறமும் ஒன்றாய் நின்ற
ஒளிவிளக்கே சென்றனை யோ.

## திரு. த. சண்முகலிங்கம்

( தலைவர்,
சைவ பரிபாலன சபை,
இலங்கை)



அயராத உழைப்பாளி
அரன்பணியில் நிறைவு கண்டீர்
சைவபரிபாலன சபையின்
சரித்திரம் காத்த சான்றோனே
புண்ணிய நாச்சியார் அறக்கட்டளை
புனிதம் பெற உழைத்த பிறவி
சிதம்பரத்திலுள்ள நாவலர் சொத்தை
சிந்தையில் நினைத்துக் காத்த

– செயல்வீர

பிறவிகடக்கும் அழைப்பை ஏற்று
புறப்பட்டு விட்டீர்... கயிலை காண்பீர்



செல்வீச்சில் தாயை இழந்தவள்
செங்குருதியில் தாயுடன் நனைந்தவள்,
காடுமேடெலாம் கண்ணீருடன் அலைந்தவள்,
தந்தையோடும், தம்பியோடும்
தடுப்புமுகாமில் தத்தளித்தவள்
பால்முகம் மாறா பாவியிவள்
பரிவுதேடி சரண்புகுந்தாள்.
தூயவள் அன்னை துர்க்காதேவியின்
துர்க்காபுரம் மகளிர் இல்லமழலையானாள்
பிறந்த நாளில் ஒளியேற்றி
பிஞ்சு இவள் சிரிக்கிறாள்
ஆசீர்வதியுங்கள் அஞ்சேல் என்று
அல்லல் போம்..

– கலாநிதி ஆறு. திருமுருகன்



துர்க்காதேவி ஆலயத்தில் நவராத்திரி நாட்களில்
கொலு வீற்றிருக்கும் காட்சி

ANDRA DIGITAL PRINTERS T.P : 021 222 8929